# வணிகக்கல்வி

## பாடத்திட்டம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திரம்
### (உயர் தரம்)

## தரம் 12, 13

(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.)

வணிகக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
www.nie.lk

வணிகக் கல்வி
தரம் - 12, 13ற்கான பாடத்திட்டம்

© தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2017

வணிகக் கல்வித்துறை
விஞ்ஞான தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

அச்சிடல்:

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | ii |
| 2.0 | தேசிய இலக்குகள் | iii |
| 3.0 | அடிப்படைத் தேர்ச்சிகள் | iv-v |
| 4.0 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | vi |
| 5.0 | தேசிய பொது நோக்கத்திற்கும் பாடத்திட்ட நோக்கத்திற்குமிடையிலான தொடர்பு | vii |
| 6.0 | பாடத்திட்டம் | viii-ix |
| | 6.1 தரம் 12 பாடத்திட்டம் | 1-43 |
| | 6.2 தரம் 13 பாடத்திட்டம் | 44-82 |
| 7.0 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும் | 83-84 |
| 8.0 | கணிப்பீடும் மதிப்பீடும் | 85 |

## 1.0 அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர)த்திற்கு முதல் முறையாக தேர்ச்சி முறையில் அமைந்த பாடத் திட்டமொன்று 2009ம் ஆண்டிலிருந்து பாடசாலை வலையமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. கல்விப் பொதுத் தராதர (உயர்தர) மாணவர்கள் வணிகக் கல்விப் பாடத்தைக் கற்பதன் மூலம் உரிய பாட அறிவை மாத்திரமன்றி, சிறந்த மனப்பாங்கு, செயற்பாட்டுத்திறன் என்பனவற்றை உள்ளடக்கிய குடிமகன் எனும் நிலைக்கு மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று 2015ம் ஆண்டிலிருந்து நவீனமயப்படுத்தப்பட்ட க.பொ.த (சாதாரண) தரத்தில் வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும், முயற்சியாண்மைக்கல்வி போன்ற பாடத்திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும், பூகோள ரீதியாக மட்டுமன்றி உள்நாட்டிலும் வணிகத்துறையில் இடம்பெற்று வருகின்ற நவீன போக்குகளையும் கவனத்தில் கொண்டு 2015ம் ஆண்டிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) வணிகப் பாடத்திட்டத்தில் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நவீனமயப் படுத்தப்பட்டு முன்வைக்கப்படுதல் இங்கு இடம்பெறுகின்றது.

வணிகக்கல்விப் பாடமானது மிகப் பிரபல்யமான வணிகவியல் பாடமொன்றாகும். அத்துடன் செயற்பாட்டு ரீதியான பாடமும் ஆகும். இப்பாட மானது பொருளியல், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் போன்ற பாடங்களினால் வலுவூட்டப்பட்டுள்ளது. வணிகக்கல்விப் பாடம் உயர்தரம் வணிகவியல் பாடத்துறையின் பாடமொன்றாக இருப்பதுடன், கலை மற்றும் தொழில்நுட்ப பாடத்துறையை கற்கின்ற மாணவர்களுக்கும் தெரிவு செய்யக்கூடிய பாடமொன்றாகும். இப்பாடத்தைக் கற்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற அறிவு, திறன், மனப்பாங்கு என்பன பொதுவாக சாதாரண வாழ்க்கைப் பயன்பாட்டிற்கும், உயர் கல்விக்கு மட்டுமன்றி வணிகவியல் துறையின் தொழில்சார் கல்விக்கும் பயன்படுத்துவதற்கும் துணையாக அமையும்.

வணிகத்துறையில் இடம்பெறுகின்ற மாற்றங்களுக்கு இயைபாக்கமடைவதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை உள்ளடக்கிய வாழ்க்கைப் பழக்கங்கள் எனப்படுகின்ற தேர்ச்சிகளுடன் கூடிய குடிமகன் ஒருவரை உருவாக்குவதற்கு ஏற்றவாறு கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கொன்று இங்கு முன்மொழியப்படுகின்றது.

உயர்கல்வியில் ஈடுபடாதவர்களுக்கு தொழிலொன்றில் அல்லது சுயதொழிலொன்றில் ஈடுபடுவதற்குத் தேவையான தேர்ச்சியினையும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பயனுறுதி மிக்கதாக பங்களிப்புச் செய்யக்கூடியவாறு முயற்சியாண்மைத் திறன்களைப் பெற்றுக் கொடுப்பதுடன், தனிப்பட்ட வாழ்க்கையில் நிலைத்து நிற்பதற்கும் தரமான விளைதிறன்மிக்க விருத்திகளை இப்பாடத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று இலங்கையின் தேசிய அபிவிருத்தி கருதி, தேவையான பௌதீக மனித வளங்களை ஆக்கபூர்வமாக உருவாக்குதல், மேம்படுத்துதல், விளைதிறன் கொண்டதாக பயன்படுத்துதல் என்பனவற்றிற்குத் தேவையான தேர்ச்சியினை விருத்தி செய்து கொள்வது இப்பாடத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு முறைகளை வகுப்பறையில் மட்டுமன்றி, புறரீதியாகவும் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகள் இங்கு வழங்கப்படுகின்றது. வணிகங்கள் நடைமுறை ரீதியான தன்மையினைக் கொண்டிருப்பதனாலும், நாளாந்தம் பழக்கவழக்கங்கள் மிக விரைவாக மாற்றமடைவதனாலும் இவை தொடர்பில் கவனம் செலுத்தி ஆசிரியர் எனும் வகையில் உங்கள் அறிவினை இற்றைப்படுத்திக் கொள்வீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

## 2.0 தேசிய இலக்குகள்

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்கேற்ப உருவாக்கப்பட்டு இலங்கையிலுள்ள பல்வேறு சமூகங்களின் பல்லினக் கலாசாரத்தை விளங்கி, தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி யெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீ கரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதொரு இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் அறிக்கை (2003) - மார்கழி*

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை போன்ற நான்கு தொகுதிகளினடிப்படையில் தொடர்பாடல் தேர்ச்சிகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

**எழுத்தறிவு** : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

**எண்ணறிவு** : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்குமுறையாக அளத்தல்.

**சித்திர அறிவு** : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் என்பனவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

**தகவல் தொழில்நுட்பத் தகைமை** : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மனஎழுச்சிகள், நுண்ணறிவு

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சமூகம், உயிரியல், பௌதிகம் போன்ற சூழல்களுடன் தொடர்புறுகின்றன.

**சமூகச் சூழல்:**

தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும் பகிர்ந் தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்:**
வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி, மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதிகச் சூழல்:**
இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும்.
கற்றலுக்கும், வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும், சவால்களை இனம் காணல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தலும், பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல் போன்ற இயலுமைகளை உச்சப்படுத்திக் கொள்வதற்கும் இயலளவை அதிகரித்துக் கொள்வதற்குமான வேலை பொருளுணர்வுடன் தொடர்புடைய திறன்கள்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வுநேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**
விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும், வெற்றியையும் பெறச் செய்தல்.

## 4.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்வதுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு நிறுவன அல்லது அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை தேடியறியக்கூடிய முறைகளைக் கலந்தாலோசிப்பதில் ஈடுபடுத்துதல்.
- மாற்றமடையும் வணிகச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம், அதற்கு இயைபாக்கம் அடையக்கூடியதான ஆயத்தத்தை வெளிப் படுத்துதல்.
- வணிகம் தொடர்பில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற சட்டபூர்வமான அறிவினை நடைமுறை ரீதியில் பயன்படுத்துவதில் ஈடுபடுத்துதல்.
- வணிகத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், அடிப்படைகள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கும் விரிவான பாடவிடயங்களை எளிமையாக உள்வாங்கிக் கொள்வதற்குமான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- முயற்சியாண்மை, முகாமைத்துவத் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பமளித்தல்.
- சூழலை நேசிப்பவராக வணிகக் கருமங்களை நடாத்திச் சென்று இலங்கையை நிலைபேறான அபிவிருத்தியில் ஈடுபடச் செய்தல்.
- தேசிய, வலய, பூகோள ரீதியாக வணிகங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- இலங்கையில் சிறந்த வணிக கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்குகளை கட்டியெழுப்பச் சந்தர்ப்பம் வழங்கல்.
- திட்டங்களுடன் வணிகங்களை ஆரம்பிப்பதற்கும், அவற்றை நடாத்திச் செய்வதற்கும் தேவையான பழக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- தொழில்சார் வகிபாகங்களில் வெற்றிகரமாக செயலாற்றுவதற்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- சமூக, பொருளாதார விருத்தி கருதி முகாமைத்துவம், நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் திறனைப் பெற்றுக் கொடுத்தல்.
- உயர்கல்வியில் ஈடுபடுவதற்கான ஆரம்பத்தினைப் பெற்றுக் கொடுத்தல்.

## 5.0 தேசிய இலக்குகளுக்கும் பாடத்திட்ட இலக்குகளுக்குமிடையிலான தொடர்பு

| பாடத்திட்ட இலக்குகள் | தேசிய பொது இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | I | II | III | IV | V | VI | VII | VIII |
| • மனித தேவை விருப்பங்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு நிறுவக அல்லது அமைப்புக்களிலான அடிப்படையில் தீர்வுகளை தேடியறிந்து கொள்ளக்கூடிய முறைகளை தேடியறிதலில் ஈடுபடச் செய்தல். | ✓ | | | | | | | |
| • மாற்றமடையும் வணிகச் சூழலை அறிந்து கொள்வதன் மூலம் அதற்கு இயைபாக்கமடைவதற்கான ஆயத்தத்தை ஏற்படுத்தல். | | ✓ | | | | | ✓ | |
| • வணிகம் தொடர்பில் பெற்றுக் கொள்ளும் சட்டரீதியான அறிவினைச் செயற்பாட்டு ரீதியாகப் பயன்படுத்துவதில் ஈடுபடுத்துதல். | | ✓ | | | | | ✓ | |
| • வணிகம் தொடர்பிலான எண்ணக்கருக்கள், அடிப்படைகள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கும், விரிவான பாடவிடயங்களை எளிமையாக உள்வாங்கிக் கொள்வதற்குமான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுத்தல். | | | | | | ✓ | | |
| • முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவத் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கல். | | | ✓ | | | | | |
| • சூழலை நேசிப்பவராக வணிக நடவடிக்கைகளை நடாத்திச் சென்று இலங்கையை நிலைபேறான அபிவிருத்தியில் ஈடுபடச் செய்தல். | | | | ✓ | | | | |
| • தேசிய, வலய, பூகோள ரீதியாக வணிகங்களில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுத்தல். | | | ✓ | | | | | ✓ |
| • இலங்கையில் சிறந்த வணிகக் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதற்குத் தேவையான மனப்பாங்குகளைக் கட்டியெழுப்பச் சந்தர்ப்பம் வழங்கல். | ✓ | | | ✓ | | | | |
| • திட்டங்களுடன் வணிகங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான சூழலைப் பெற்றுக் கொடுத்தல். | | | | | ✓ | | ✓ | |
| • தொழில்சார் வகிபாகங்களில் வெற்றிகரமாகச் செயலாற்றுவதற்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொடுத்தல். | | | | | ✓ | | | |
| • சமூகப் பொருளாதார விருத்தி கருதி, முகாமைத்துவம் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் திறனைப் பெற்றுக் கொடுத்தல். | | | | | | ✓ | | |
| • உயர் கல்வியில் ஈடுபடுவதற்கான ஆரம்பத்தினைப் பெற்றுக் கொடுத்தல். | | | | | | ✓ | | |

## 6.0 பாடத்திட்டம்

| தரம் - 12 | | தரம் - 13 | |
|---|---|---|---|
| **தேர்ச்சிகள்** | **பாடவேளைகளின் எண்ணிக்கை** | **தேர்ச்சிகள்** | **பாடவேளைகளின் எண்ணிக்கை** |
| 1.0 வணிக அடிப்படைகளையும், அவ்வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவார். | 50 | 12.0 தனிநபர்களினதும் அமைப்புக்களினதும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக முகாமைத்துவத்தின் தேவைப்பாட்டினையும் முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டுவார். | 45 |
| 2.0 வணிகச் சூழலுக்கு இயைபாக்கமடைவதற்கு வணிகமானது சமூக ரீதியான பொறுப்புக்கள், விழுமியங்கள் மீது கவனம் செலுத்தும் முறையினைக் கேட்டறிவார். | 20 | 13.0 வணிகங்களின் வெற்றிக்கு செயற்பாட்டு முகாமைத்துவத்தின் பங்களிப்பினை மதிப்பார். | 45 |
| 3.0 அரசுடன் தொடர்புகளைப் பேணியவாறு வணிகங்களை நடாத்திச் செல்வதன் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார். | 30 | 14.0 வணிகத்தின் வெற்றிக்கு, சந்தைப் படுத்தல் முகாமைத்துவத்தின் பங்களிப்பினை மதிப்பார். | 45 |
| 4.0 பல்வேறு வணிக அமைப்பு வகைகளையும் அவற்றை முறையாக ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கான தேவைப்பாட்டினையும் உறுதிப் படுத்துவார். | 40 | 15.0 வணிகத்தின் வெற்றிக்கு நிதி முகாமைத்துவத்தினைப் பயன்படுத்துகின்ற முறையினைத் தேடியறிவார். | 45 |
| 5.0 சமூகப் பொருளாதார தனியாள் விருத்திக்காக முயற்சியாண்மையின் பங்களிப்பினை மதிப்பார். | 20 | 16.0 வணிகத்தின் வெற்றிக்கு மனிதவளத்தை வினைத்திறனாக பயன்படுத்துகின்ற முறையினைத் தேடியறிவார். | 45 |
| 6.0 சிறிய நடுத்தர அளவான வணிகங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு வழங்கும் பங்களிப்பினை மதிப்பார். | 15 | 17.0 வணிகங்களின் வெற்றிக்கு தகவல் முறைமையின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்கின்ற முறையினைத் தேடியறிவார். | 35 |
| 7.0 வணிகங்களின் வாழ்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் பணம் மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பினை மதிப்பார். | 40 | 18.0 வணிகங்களை ஆரம்பிப்பதற்கும் விரிவாக்குவதற்கும் வணிகத் திட்டத்தினைத் தயாரிக்கும் முறையினை அறிந்து கொள்வார். | 40 |
| 8.0 வணிகங்களின் வாழ்தன்மைக்கு காப்புறுதியின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார். | 15 | | |
| 9.0 வணிகக் கருமங்களின் வெற்றிக்குத் தொடர்பாடலை பயனுறுதியாகப் பயன்படுத்துவதன் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார். | 10 | | |
| 10.0 போக்குவரத்தும் (Logistics) வழங்கல்சேவையும் வணிகங்களின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார். | 20 | | |
| 11.0 உற்பத்திகளை விநியோகிப்பதற்கு வியாபாரம் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார். | 40 | | |
| | **300** | | **300** |

**பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைக்கமைய பகிர்ந்து கொள்வதற்கு முன்மொழியப்படும் திட்டம்**

| தரம் | தவணைகள் | தேர்ச்சியும் தேர்ச்சி மட்டங்களும் | பாடவேளைகளின் எண்ணிக்கை | தேர்ச்சி மட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தரம் 12 | 1ம் தவணை | தேர்ச்சி மட்டம் 1.1 - தேர்ச்சி மட்டம் 3.6 வரை | 100 | தேர்ச்சி மட்டம் 18 |
| | 2ம் தவணை | தேர்ச்சி மட்டம் 4.1 - தேர்ச்சி மட்டம் 7.4 வரை | 95 | தேர்ச்சி மட்டம் 16 |
| | 3ம் தவணை | தேர்ச்சி மட்டம் 7.5 - தேர்ச்சி மட்டம் 11.7 வரை | 105 | தேர்ச்சி மட்டம் 19 |
| தரம் 13 | 1ம் தவணை | தேர்ச்சி மட்டம் 12.1 - தேர்ச்சி மட்டம் 14.2 வரை | 100 | தேர்ச்சி மட்டம் 23 |
| | 2ம் தவணை | தேர்ச்சி மட்டம் 14.3 - தேர்ச்சி மட்டம் 16.4 வரை | 100 | தேர்ச்சி மட்டம் 21 |
| | 3ம் தவணை | தேர்ச்சி மட்டம் 16.5 - தேர்ச்சி மட்டம் 18.7 வரை | 100 | தேர்ச்சி மட்டம் 19 |

## 6.1 தரம் - 12ற்கான பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 வணிக அடிப் படைகளையும், அவ் வணிகங் கள் செயற் படுகின்ற சூழலையும் தேடியறிவார். | | | | 50 |
| | 1.1 வணிக எண்ணக் கருவினைப் பகுப் பாய்வு செய்வார். | • வணிக எண்ணக்கரு<br>• அறிமுகம்<br>• தேவைகளும் விருப்பங்களும்<br>• உற்பத்திகள்<br>• பொருட்கள்<br>• சேவைகள்<br>• சந்தை<br>• வணிகங்களின் பண்புகள்<br>• விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்<br>• பொருட்கள், சேவைகளின் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறல்.<br>• கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ச்சியாக இடம்பெறல்.<br>• இலாபத்தினால் ஊக்குவிக் கப்படல்.<br>• இடரொன்று காணப்படல்.<br>• விருப்பங்கள் உருவாக்கப் படல்.<br>• பொருளாதார நடவடிக்கை யொன்றாக இருத்தல்.<br>• வணிகக் கருமங்கள்<br>• தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்தல்.<br>• வளங்களுக்குப் பெறுமானத் தைச் சேர்த்தல். (கூட்டப்பட்ட பெறுமதி)<br>• வணிக நோக்கங்கள் | • வணிக எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துவார்.<br>• தேவைகள், விருப்பங்களை உதாரணங்களுடன் விளக்குவார்.<br>• தேவைகள், விருப்பங்களுக்கிடையே காணப் படும் வேறுபாடுகளை உதாரணங்களைக் குறிப் பிட்டு ஒப்பிடுவார்.<br>• உற்பத்தி என்பதை விளக்குவார்.<br>• மனிதத் தேவைகள் விருப்பங்கள் உற்பத்தி களின் மூலமே நிறைவு செய்யப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவார்.<br>• பொருட்களுக்கும் சேவைகளுக்குமிடையிலான வேறுபாடுகளை ஒப்பிடுவார்.<br>• தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்து கொள்வதற்கும் சந்தைக்குமிடையில் காணப்படு கின்ற தொடர்பைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகங்களின் பண்புகளை உதாரணங்களோடு விபரிப்பார்.<br>• வணிகக் கருமங்கள் என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• வழங்கப்பட்ட வணிகமொன்றின் வணிகக் கருமங்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• வணிகங்களின் நோக்கங்களை உதாரணங் களோடு விளக்குவார்.<br>• பொருளாதாரமொன்றின் வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பினை மதிப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.2 வணிகங்களது பரம்பலையும் அதன் போக்கு களையும் அறிந்து கொள்வார். | • சுய தேவைப் பூர்த்திப் பொரு ளாதார முறை<br>• நேர் உற்பத்தி<br>• தனிநபர் சிறப்புத் தேர்ச்சி<br>• வணிகப் பரம்பல்<br>• பண்டமாற்று முறை<br>• நேரில் உற்பத்தி<br>• வியாபாரம்<br>• பணப் பயன்பாடு<br>• பணத்தின் வளர்ச்சி (பரம்பல்)<br>• கைத்தொழில் புரட்சி<br>• வர்த்தகம்<br>• வியாபாரம்<br>• துணைச்சேவைகள் / வணிகத்திற்கு உதவும் சேவைகள்.<br>• தகவல் பொருளாதாரம்<br>• இலத்திரனியல் வர்த்தகம்<br>• வணிகங்களின் போக்கு<br>• பூகோள ரீதியாகப் பரவ லடைதல்<br>• இலத்திரனியல் வணிகம் தோற்றம் பெறல்<br>• இலத்திரனியல் பணப் பயன்பாடு | • சுயதேவைப் பூர்த்தி முறையினை விளக்குவார்.<br>• வணிகப் பரம்பலின் சந்தர்ப்பங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• நேர் உற்பத்திக்கும் நேரில் உற்பத்திக்குமிடை யிலான வேறுபாடுகளை விளக்குவார்.<br>• பணத்தின் வளர்ச்சியினை (பரம்பலை) விளக்குவார்.<br>• வியாபாரத்தின் கடந்தகால நிலைமைகளையும் நிகழ்கால நிலைமைகளையும் ஒப்பிடுவார்.<br>• வர்த்தகத்திற்கும் வியாபாரத்திற்குமிடையிலான வேறுபாடுகளை விளக்குவார்.<br>• வணிகத்திற்காகக் காணப்படும் துணைச்சேவை களை அறிமுகப்படுத்துவார்.<br>• இலத்திரனியல் வர்த்தகத்தினை விளக்குவார்.<br>• நிகழ்காலத்தில் இலத்திரனியல் வர்த்தகமானது பிரபல்யமடைவதற்கான காரணங்களை வெளிப் படுத்துவார்.<br>• வணிக உலகின் நிகழ்காலப் போக்கினையும் அதன் மூலம் வணிகங்களில் இடம்பெற்றுள்ள மாற்றங்களையும் விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.3 பல்வேறு நியதிகளின் அடிப்படையில் வணிகங்களை வகைப் படுத்துவார். | • வணிகங்களை வகைப்படுத்துவதன் நியதிகள்<br>• உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில்<br>• முதல்நிலை<br>• இரண்டாம் நிலை<br>• மூன்றாம் நிலை<br>• உரிமையின் அடிப்படையில்<br>• தனியார் துறை<br>• பொது / அரசதுறை<br>• நோக்கத்தின் அடிப்படையில்<br>• இலாப நோக்குடைய<br>• இலாப நோக்கற்ற<br>• பருமன் அடிப்படையில்<br>• சிறிய, நடுத்தரஅளவு<br>• பாரியளவு<br>• உற்பத்தித் துறையின் அடிப்படையில்<br>• விவசாயம்<br>• கைத்தொழில்<br>• சேவை<br>• மொத்தத் தேசிய உற்பத்திக்கு ஒவ்வொரு உற்பத்தித் துறைகளினதும் பங்களிப்பு. | • வணிகங்களை வகைப்படுத்தக்கூடிய பல்வேறு நியதிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்தில் காணப் படும் வணிகங்களைப் பல்வேறு நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• ஒரே வணிகமானது பல்வேறு நியதிகளின் அடிப் படையில் பல வகைகளுக்கு உரியதாகும் என்பதை விளக்குவார்.<br>• வழங்கப்பட்ட வணிகமொன்று ஒவ்வொரு நியதி களினடிப்படையில் எவ் வகைக்குரியது என்பதனைச் சுட்டிக் காட்டுவார்.<br>• இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியினை வகைப்படுத்தும் முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• மொத்தத் தேசிய உற்பத்திக்கு, ஒவ்வொரு உற்பத்தித் துறையினதும் பங்களிப்பினை முன்வைப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.4 வணிகங்கள் உள்ளீட்டு, வெளியீட்டுச் செயன் முறையொன்றாகுமெனப் பகுப்பாய்வு செய்வார். | • வணிக உள்ளீட்டு வெளியீட்டு செயன்முறை<br>• வணிக உள்ளீடுகள் (வளங்கள்)<br>• நிலம்<br>• உழைப்பு<br>• மூலதனம்<br>• முயற்சியாண்மை<br>• தகவல்கள்<br>• நேரம்<br>• அறிவு<br>• வணிகத் தொழிற்பாடுகள்<br>• செயன்முறைகள்(உற்பத்தி)<br>• நிருவாகம்<br>• சந்தைப்படுத்தல்<br>• நிதி நடவடிக்கைகள்<br>• மனிதவள நடவடிக்கைகள்<br>• ஆய்வும், அபிவிருத்தி நடவடிக்கைகளும்<br>• வணிக வெளியீடுகள்<br>• பொருட்கள்<br>• சேவைகள் | • வணிகங்களது உள்ளீடுகளை விளக்குவார்.<br>• வணிகக் கருமங்களை விளக்குவார்.<br>• வணிகங்களின் வெளியீடுகளைப் பட்டியல் படுத்துவார்.<br>• வணிகம் உள்ளீட்டு வெளியீட்டுச் செயன்முறையொன்றென்பதை வரைபடமொன்றின் மூலம் சுட்டிக் காட்டுவார்.<br>• யாதேனும் வெளியீடொன்றிற்குரிய உள்ளீடுகளை ஒவ்வொரு உள்ளீட்டு வகைகளின் கீழ் வேறுபடுத்திக் காட்டுவார்.<br>• வணிகங்களின் கருமங்கள் வணிகங்களின் தன்மைக்கமைய வேறுபடும் என்பதனை உதாரணங்களோடு தெளிவுபடுத்துவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 1.5 வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் வணிகம் தொடர்பாக அக்கறை செலுத்துவதற்கான காரணங்களைக் கேட்டறிவார். | • வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்<br>• உரிமையாளர் / பங்காளர்<br>• முகாமையாளர்<br>• ஊழியர்<br>• கடன்கொடுத்தோர்<br>• நுகர்வோர்<br>• வழங்குநர்<br>• எதிர்கால முதலீட்டாளர்கள்<br>• அரசு<br>• சமூகம்<br>• ஏனைய பிரிவினர்<br>• வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர் அவற்றின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள்.<br>• வணிகமொன்றிற்கு வணிகத்தின்மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களின் முக்கியத்துவம். | • தெரிவு செய்த வணிகமொன்றின் உதவியுடன், அவ்வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• ஒவ்வொரு பிரிவினர்களும் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்களை விளக்குவார்.<br>• ஒவ்வொரு அக்கறை காட்டும் பிரிவினரும் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் பல்வேறுபட்டவை என்பதை வெளிப்படுத்துவார்.<br>• வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் வணிகமொன்றிற்கு முக்கியத்துவம் பெறும் முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகமொன்றின் வெற்றிகரமான வாழ்தன்மைக்கு அக்கறை செலுத்தும் பிரிவினர்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள், வணிகத்தின் மீது காட்டும் அக்கறை, அவர்களுக்கு வணிகத்தின் மீது அழுத்தங்களை ஏற்படுத்துவதற்குமுள்ள இயலுமை என்பவற்றின் அடிப்படையில் அப்பிரிவினர்களின் முக்கியத்துவத்தைத் தீர்மானிப்பார். | 06 |
| | 1.6 வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் வணிகச்சூழலை வகைப்படுத்திக் காட்டுவார். | • வணிகச் சூழல்<br>• அறிமுகம்<br>• கற்பதன் முக்கியத்துவம்<br>• வகைப்படுத்தல்<br>• அகச்சூழல்<br>• புறச்சூழல் | • வணிகச் சூழலை அறிமுகப்படுத்துவார்.<br>• வணிகச் சூழலைக் கற்பதன் மூலம் வணிகரொருவருக்குக் கிடைக்கின்ற நன்மைகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• வணிகச் சூழலை வகைப்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • வேலைச்சூழல் / அண்மிய சூழல்<br>• பொது / பேரினச்சூழல் | • வணிகச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தும் பல் வேறு சூழல் காரணிகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• வழங்கப்பட்ட வணிகமொன்றின் அக, புறச்சூழல் காரணிகளுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார். | |
| | 1.7 வணிகத்தின் அகச் சூழல் காரணிகளி னால் வணிகங் களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுத்தாய்வார். | • வணிக அகச்சூழல் காரணிகள்<br>• உரிமையாளர்கள்<br>• முகாமையாளர்கள்<br>• ஊழியர்கள்<br>• அமைப்புக் கலாசாரம்<br>• நிறுவனக் கட்டமைப்பு<br>• வணிகத்தின் வளங்கள்<br>• அகச்சூழல் காரணிகளுடன் தொடர்புடைய பலங்களும் பலவீனங்களும் | • வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அகச்சூழல் காரணிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஒவ்வொரு அகச் சூழற் காரணிகளுடன் இணைந்த பலங்கள், பலவீனங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகத்தின் அகச்சூழலின் பலங்களும் பல வீனங்களும் வணிகக் கருமங்களில் தாக்கத்தை யேற்படுத்தும் முறையினை நுணுக்கமாகப் பகுப் பாய்வு செய்வார்.<br>• பலங்களைப் பயன்படுத்தி வணிகத்தை வெற்றி கரமாக்கிக் கொள்ளக்கூடிய முறையினையும் பலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பின் பற்றவேண்டிய வழிமுறைகளையும் விளக்குவார். | 06 |
| | 1.8 வேலைச்சூழற் (அண்மிய) காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார். | • அண்மிய சூழற் காரணிகள்<br>• வாடிக்கையாளர் / நுகர்வோர்<br>• வழங்குநர்கள்<br>• போட்டியாளர்கள்<br>• சந்தையில் பிரவேசிக்க எதிர் பார்த்திருக்கும் புதிய வணிகர்கள்<br>• பிரதியீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வோர் | • வணிகத்தின் மீது தாக்கத்தையேற்படுத்தும் அண்மிய சூழல் காரணிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• அண்மிய சூழல் காரணிகளுடன் இணைந்ததாக உருவாகின்ற வணிக வாய்ப்புக்களைப் பட்டியற் படுத்துவார்.<br>• அண்மிய சூழல் காரணிகளுடன் இணைந்ததாக வணிகங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சுட்டிக்காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அண்மிய சூழல் காரணிகளுடன் இணைந்த வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் | • தெரிவு செய்த வணிகமொன்றில் அண்மிய சூழல் காரணிகள் அவ்வணிகத்திற்கு ஏற்படுத்தும் தாக்கங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிக வாய்ப்புக்களை இனங்கண்டு அவற்றின் மூலம் அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதற்குமான முன்மொழிவுகளை முன்வைப்பார். | |
| | 1.9 பேரினச் சூழற் காரணிகள் வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார். | • பேரினச் (பொது) சூழல் காரணிகள்<br>• பொருளாதாரச் சூழல்<br>• அரசியல் சூழல்<br>• சட்டச் சூழல்<br>• தொழில்நுட்பச் சூழல்<br>• குடியியல் சூழல் (மக்கள் சூழல்)<br>• இயற்கைச் சூழல்<br>• சமூகக் கலாசாரச் சூழல்<br>• பூகோள மயச் சூழல்<br>• பேரினச் சூழல் காரணிகள் அண்மிய சூழல் காரணிகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள்.<br>• பேரினச் சூழல் காரணிகளுக்கிடையிலான இடைத்தொடர்பு. | • வணிகத்தின் மீது தாக்கத்தையேற்படுத்தும் பேரினச்சூழல் காரணிகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• ஒவ்வொரு பேரினச்சூழல் காரணிகளையும் விபரிப்பார்.<br>• ஒவ்வொரு பேரினச்சூழல் காரணிகளினாலும் வணிகத்திற்கு கிடைக்கப் பெறும் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• பேரினச்சூழல் காரணிகள் வணிகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்திற்கான உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவார்.<br>• பேரினச்சூழல் காரணிகள் அண்மிய சூழல் காரணிகளில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்வார்.<br>• பேரினச்சூழல் காரணிகளுக்கிடையில் இடைத்தொடர்புகள் காணப்படுகின்றன என்பதற்கான உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| 2.0 வணிகச் சூழலுக்கு இயைபாக்க மடைவதற்கு வணிகமானது சமூகரீதியான பொறுப்புக்கள், விழுமியங்கள் மீது கவனம் செலுத்தும் முறையினைக் கேட்டறிவார் | | | | 20 |
| | 2.1 வணிகங்களினால் சமூகரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • வணிகங்களின் சமூகரீதியான பொறுப்புக்கள்<br>• விளக்குதல்<br>• சமூகப் பொறுப்புக்களை நிறை வேற்றுவதன் தேவைப்பாடு.<br>• சமூக பொறுப்புக்களை நிறை வேற்ற வேண்டிய பிரிவினர்<br>• உரிமையாளர்<br>• ஊழியர்கள்<br>• வாடிக்கையாளர்<br>• சமூகம்<br>• அரசு<br>• மக்கள்<br>• சூழல் | • ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களி னூடாக வணிகங்களின் சமூக ரீதியான பொறுப்புக்களை அறிமுகப்படுத்துவார்.<br>• வணிகங்கள் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியதன் தேவைப்பாட்டினை விளக்குவார்.<br>• வணிகங்களின் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவுவேற்ற வேண்டிய பிரிவினர்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• வணிகங்களினால் ஒவ்வொரு பிரிவினர்களுக் கும் நிறைவு செய்ய வேண்டிய சமூக ரீதியான பொறுப்புக்களைத் தனித்தனியாக உதாரணங் களுடன் முன்வைப்பார்.<br>• வணிக நிறுவனமொன்றை உதாரணமாக எடுத்து அது ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவு செய்யும் முறைகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்று வதன் மூலம் வணிகமொன்றுக்கு கிடைக்கின்ற அனுகூலங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• சகல பிரிவினர்களினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய முறையில் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய முறை யினை விளக்குவார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.2 சூழலை நேசிக்கக் கூடியதாகக் கரும மாற்றி நிலை பேறான அபிவிருத் திக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய் யும் முறையை மதிப்பார். | • நிலைபேறான அபிவிருத்தி<br>• நிலைபேறான அபிவிருத் திக்கு வணிகங்களின் பங்களிப்பு<br>• பொருளாதாரத்தின் நிலை பேறான அபிவிருத்திக்கு<br>• சூழலின் நிலைபேறான அபிவிருத்திக்கு<br>• சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கு<br>• நிலைபேறான அபிவிருத் திக்கு வணிகங்கள் பயன்படுத் தும் நவீன முறைகள் (4 R)<br>• மீள்சுழற்சி (Recycle)<br>• மீள்பாவனை (Reuse)<br>• பாவனையைக் குறைத்தல் (Reduce)<br>• பிரதியீடு (இடமாற்றல்) (Replace)<br>• வணிக நடவடிக்கைகளின் பாதகமான தாக்கங்கள் | • நிலைபேறான அபிவிருத்தி என்றால் என்ன என்பதனை விளக்குவார்.<br>• நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யக்கூடிய முறையினை விளக்குவார்.<br>• நடைமுறையில் காணப்படுகின்ற வணிக மொன்றை உதாரணமாகக் கொண்டு அது நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• நிலைபேறான அபிவிருத்திக்கு நுகர்வோர் பங்களிப்புச் செய்யக்கூடிய முறையினை விளக்குவார்.<br>• வணிக நடவடிக்கைகளில் பாதகமான தாக்கங் களை அறிமுகப்படுத்தி அவற்றை இழிவுபடுத்து வதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 வணிகங்களின் வெற்றிக்கு ஒழுக்க விழுமிய முறைமையொன்றின் தேவைப் பாட்டினை உறுதிப் படுத்துவார். | • வணிக ஒழுக்க விழுமியங்கள்<br>• வணிகங்கள் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம்.<br>• வணிகமொன்று ஒழுக்க விழுமிய முறைமையொன்றினைக் கட்டியெழுப்பும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்:<br>• வணிகம்<br>• வாடிக்கையாளர்<br>• ஊழியர்<br>• போட்டியாளர்<br>• சமூக கலாசாரம்<br>• நிறுவனக் கலாசாரம்<br>• நடைமுறைக்குச் சாத்தியம்<br>• வணிக ஒழுக்க விழுமியங்களுக்கும் சமூகப் பொறுப்புக்களுக்குமிடையிலான வேறுபாடுகள் | • வணிக ஒழுக்க விழுமிய எண்ணக்கருவினை விளக்குவார்.<br>• வணிகங்களில் இடம்பெறும் நல்ல, தீய விடயங்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• வணிகங்கள் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகங்கள் ஒழுக்க விழுமிய முறைமையொன்றைக் கட்டியெழுப்பும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைப் பட்டியற் படுத்துவார்.<br>• ஒவ்வொரு வணிக காரணிகளுக்கும் பொருத்தமான ஒழுக்க விழுமியங்களைத் தனது அனுபவங்களினூடாக முன்மொழிவார்.<br>• நடைமுறையில் காணப்படும் வணிகமொன்றைக் கருத்தில் கொண்டு அந்நிறுவனம் பின்பற்றும் ஒழுக்க விழுமியங்களைக் கலந்துரையாடுவார்.<br>• கருதுகோளாகக் கொள்ளப்பட்ட வணிகமொன்றுக்குப் பொருத்தமான வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றினைக் கட்டியெழுப்புவார்.<br>• வணிக ஒழுக்க விழுமியங்களுக்கும் சமூகப் பொறுப்புக்களுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளை விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 அரசுடன் தொடர்புகளைப் பேணியவாறு வணிகங்களை நடாத்திச் செல்வதன் தேவைப் பாட்டினை உறுதிப் படுத்துவார். | 3.1 அரசு வணிகங் களில் தலையிடும் முறையினைத் தேடியறிவார். | • அரசு<br>• மத்திய அரசு<br>• மாகாண சபை<br>• உள்ளூராட்சி நிறுவனங்கள்<br>• அரசு வணிகங்கள் மீது செல் வாக்குச் செலுத்தும் முறை.<br>• உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.<br>• போட்டியாளராதல்<br>• வாடிக்கையாளராதல்<br>• கொள்கைகளை உருவாக்கு தல்<br>• சட்டதிட்டங்களை - விதித்தல்<br>• ஊக்குவிப்புக்களைப் பெற் றுக் கொடுத்தல்.<br>• வரி அறவிடல் | • இலங்கையிலுள்ள வணிகங்களுக்கு அரசின் தலையீடானது மத்திய அரசு, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பனவற்றினூடாக இடம்பெறுகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டுவார்.<br>• தெரிவு செய்த வணிக நிறுவனமொன்றை உதாரணமாகக் கொண்டு அதற்கு மத்திய அரசு, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பன தலையிடும் முறையினை வெவ்வேறாக விளக்குவார்.<br>• அரசு வணிகங்களில் தலையீடு செய்யும் பல்வேறு முறைகளை விளக்குவார்.<br>• அரசு வணிகங்களில் தலையீடு செய்யும் ஒவ்வொரு முறைக்குமான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• அரசிடமிருந்து வணிகங்களுக்குக் கிடைக்கும் உதவிகள், வழிகாட்டுதல்கள் என்பன வணிகங் களுக்கு முக்கியத்துவம் பெறுகின்ற முறை யினைத் தெளிவுபடுத்துவார். | 30<br>04 |
| | 3.2 அரசின் பொருளா தார நோக்கங் களை நிறைவேற் றிக் கொள்வதற்கு வணிகங்கள் பங்க ளிப்புச் செய்யும் முறையினை எடுத் துக் காட்டுவார். | • அரசொன்றின் பொருளாதார நோக்கங்கள்.<br>• பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்.<br>• நிறை தொழில் மட்டம்<br>• பொருளாதார உறுதிப்பாடு<br>• நியாயமான வருமானப் பங்கீடு<br>• சாதகமான சர்வதேச வியாபாரம் | • அரசொன்றின் பொருளாதார நோக்கங்களை விளக்குவார்.<br>• அரசின் பொருளாதார நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தெளிவுபடுத்துவார்.<br>• தெரிவு செய்த வணிகமொன்றை உதாரணமாகக் கொண்டு அது அரசின் பொருளாதார நோக்கங் களை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் முறைகள்.<br>• வரி செலுத்துதல்<br>• தேசிய (உள்நாட்டு) வளங்களைப் பயன்படுத்துதல்.<br>• அரசு செயற்படுத்தும் கொள்கைகளைப் பின்பற்றுதல்.<br>• சட்ட திட்டங்களைப் பின்பற்றுதல்<br>• வேலைவாய்ப்பு வழங்கல்களில் பங்களிப்புச் செய்தல்.<br>• சூழலுக்கேற்படும் தீங்குகளைக் குறைத்தல்.<br>• அரசிற்கும் வணிகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளின் முக்கியத்துவம். | • அரசுக்கும் வணிகத்திற்குமிடையில் காணப்படும் நெருங்கிய தொடர்புகளினூடாக இரு பிரிவினர்களும் தத்தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதைச் சுட்டிக் காட்டுவார். | |
| | 3.3 அரசின் இறைக் கொள்கைகளுக்கு (பிசிக்கல் கொள்கை) ஏற்ப வணிகங்களை நடத்திச் செல்வதன் முக்கியத் துவத்தினை மதிப்பார். | • அரசின் இறைக்கொள்கை<br>• நோக்கங்கள்<br>• அரச வருமானங்கள்<br>• வரி வருமானம்<br>• வரி வகைகள்<br>• நேர்வரி<br>• நேரில் வரி<br>• வரி அல்லாத வருமானங்கள்<br>• அரச செலவுகள் | • அரசின் இறைக்கொள்கை என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• அரசின் இறைக்கொள்கையை நடைமுறைப் படுத்துவதன் தேவைப்பாட்டினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• அரசின் வருமானம், செலவுகள் என்பவற்றின் கட்டமைப்பினை வரைபுகள் மூலம் குறிப்பிட்டுக் காட்டுவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அரசின் இறைக்கொள்கை யானது வணிகங்களில் செல் வாக்குச் செலுத்தும் முறை. | • வரிகளை வகைப்படுத்தி ஒவ்வொரு வரி வகைக்குமான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• அரசின் வரியல்லாத வருமானங்களுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• அண்மிய வருடத்தின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைக் கருத்தில் கொண்டு அவை வணிகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வார். | |
| | 3.4 அரசின் நிதிக் கொள்கைகளுக்கு ஏற்ப வணிகங் களை நடத்திச் செல்வதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • அரசின் நிதிக்கொள்கை<br>• நோக்கங்கள்<br>• நிதிக்கொள்கைகளை நடை முறைப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்படும் கருவிகள்.<br>• வட்டி வீதங்கள்<br>• ஒதுக்கத் தேவையில் மாற்றம் செய்தல்.<br>• திறந்த சந்தை நடவடிக்கை கள்<br>• கழிவு விகிதங்களை மாற்று தல்.<br>• கடன் வரையறைகளை விதித்தல்.<br>• அரசின் நிதிக்கொள்கை வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை. | • அரசின் நிதிக்கொள்கைகளை விளக்குவார்.<br>• அரசின் நிதிக்கொள்கைகளின் நோக்கங்களை விபரிப்பார்.<br>• நாட்டின் நிதி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்து வதற்காக அரசு பின்பற்ற வேண்டிய உபாய வழிமுறைகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• அரசு பின்பற்றும் ஒவ்வொரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவிகளையும் (உபாயங்கள்) விளக்குவார்.<br>• அரசு பின்பற்றும் நிதிக் கட்டுப்பாட்டுக் கருவிகள் வணிகங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் முறையினைப் பகுப்பாய்வு செய்வார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.5 நுகர்வோர் பாதுகாப்பிற்காக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இயைபாக்க மடைந்து வணிகங் களை நடத்திச் செல்வதன் தேவைப்பாட்டினை சுட்டிக் காட்டுவார். | • நுகர்வோர் பாதுகாப்பு<br>• விளக்குதல்<br>• தேவைப்பாடு<br>• முக்கியத்துவம்<br>• நுகர்வோருக்கு<br>• வணிகர்களுக்கு<br>• நுகர்வோரின் உரிமைகள்<br>• நுகர்வோரின் பொறுப்புக்கள் | • நுகர்வோர் பாதுகாப்பு எனும் எண்ணக்கருவினை விளக்குவார்.<br>• நுகர்வோர் பாதுகாப்பு மிக முக்கியத்துவம் பெறு வதற்கான காரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• நுகர்வோர் பாதுகாப்பினால் நுகர்வோருக்கும், வணிகர்களுக்கும் கிடைக்கப் பெறும் அனுகூலங் களை வெவ்வேறாகப் பட்டியற்படுத்துவார்.<br>• நுகர்வோர் உரிமைகளை விளக்குவார்.<br>• நுகர்வோர் பொறுப்புக்களை விளக்குவார்.<br>• நுகர்வோரின் உரிமைகள், பொறுப்புக்களின் அடிப் படையில் பகுத்தறிவான நுகர்வோன் ஒருவரின் நடத்தையினை விபரிப்பார். | 05 |
| | 3.6 நுகர்வோரின் பாதுகாப்பிற்காக செயற்படுகின்ற அரச நிறுவனங் களின் தொழிற் பாடுகளைத் தேடி யறிவார். | • நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை<br>• நோக்கங்கள்<br>• தொழிற்பாடுகள்<br>• நுகர்வோர் அலுவல்கள் அதி கார சபையானது வணிகங் களுக்கு முக்கியத்துவம் பெறும் முறை.<br>• இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகம்.<br>• நோக்கங்கள்<br>• தொழிற்பாடுகள்<br>• இலங்கைத்தரக் கட்டளைகள் பணியகமானது வணிகங் களுக்கு முக்கியத்துவம் பெறும் முறை. | • இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர் பில் செயற்படும் அரச நிறுவனங்களைப் பட்டியற் படுத்துவார்.<br>• நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகார சபையின் நோக்கங்களையும் தொழிற்பாடுகளை யும் விபரிப்பார்.<br>• இலங்கைத் தரக் கட்டளைகள் பணியகத்தின் நோக்கங்கள், தொழிற்பாடுகளை விபரிப்பார்.<br>• நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை, இலங் கைத் தரக் கட்டளைகள் பணியகம் என்பன வணிகங்களுக்கு முக்கியத்துவம் பெறும் முறை யினைச் சுட்டிக் காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 4.0 பல்வேறு வணிக அமைப்பு வகைகளையும் அவற்றை முறையாக ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கான தேவைப்பாட்டினையும் உறுதிப் படுத்துவார். | | | | 40 |
| | 4.1 அமைப்பு ரீதியான எண்ணக்கருவை அறிமுகப்படுத்தி உரிமையின் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்துவார். | • அமைப்புக்கள்<br>• முறையான அமைப்பொன்றின் பண்புகள்<br>• வணிக அமைப்புக்கள்<br>• உரிமையினடிப்படையில் வணிக அமைப்புக்களின் வகைகள்<br>• தனியார் துறையின் வணிக அமைப்புக்கள்<br>• தனியாளுரிமை வணிகம்<br>• பங்குடைமை வணிகம்<br>• கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்<br>• கூட்டுறவு<br>• அரச துறை வணிக அமைப்புக்கள்<br>• திணைக்களங்கள்<br>• அரசகூட்டுத் தாபனங்கள்<br>• உள்ளூராட்சி அதிகார சபைகளின் கீழ் இடம்பெறும் வணிகங்கள்<br>• அரச கம்பனிகள்<br>• விசேட வணிகங்கள்<br>• அங்கீகார வணிகங்கள்<br>• வணிகங்களின் இணைப்பு | • அமைப்புக்கள் என்றால் என்ன என்பதை உதாரணங்களுடன் சுட்டிக் காட்டுவார்.<br>• முறையான அமைப்பொன்றில் காணக்கூடிய பண்புகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• வணிக அமைப்புக்களை வரைவிலக்கணப் படுத்துவார்.<br>• வணிக அமைப்புக்களை அதன் உரிமையினடிப் படையில் வகைப்படுத்துவார்.<br>• தனியார் துறைக்குரிய வணிக அமைப்புக்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• பொதுத் (அரச) துறைக்குரிய வணிக அமைப்புக் களைப் பட்டியல்படுத்துவார்.<br>• உரிமையினடிப்படையில் வணிக அமைப்புக் களை வகைப்படுத்தி அவற்றைப் பாய்ச்சல் கோட்டு வரைபடத்தில் காட்டுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.2 தனியாளுரிமை வணிகங்களின் பண்புகளைக் கேட்டறிந்து அவ்வணிக அமைப்புக்களின் அனுகூலங்கள், வரையறைகளைத் தேடியறிவார். | • தனியாளுரிமை வணிகங்கள்<br>• விளக்குதல்<br>• விசேட பண்புகள்<br>• அனுகூலங்கள், வரையறைகள்<br>• தனியாளுரிமை வணிகத்தினைப் பதிவு செய்தல். | • தனியாளுரிமை வணிகமென்றால் என்ன என்பதனை விளக்குவார்.<br>• தனியாளுரிமை வணிகமொன்றின் விசேட பண்புகளை விளக்குவார்.<br>• தனியாளுரிமை வணிகங்களின் அனுகூலங்கள் வரையறைகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• தனியாளுரிமை வணிகமொன்றைப் பதிவு செய்யும்பொழுது செல்வாக்குச் செலுத்தும் சட்ட திட்டங்களை விளக்குவார்.<br>• தனியாளுரிமை வணிகமொன்றைப் பதிவு செய்யும்பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விபரிப்பார். | 04 |
| | 4.3 பங்குடைமை வணிகமொன்றின் பண்புகளைக் கேட்டறிந்து அப் பங்குடைமை வணிகங்களின் அனுகூலங்களையும் வரையறைகளையும் விமர்சிப்பார். | • பங்குடைமை வணிகம்<br>• விளக்குதல்<br>• விசேட பண்புகள்<br>• பங்குடைமை ஒப்பந்தமொன்று ஏற்படக்கூடிய முறைகள்.<br>• நடத்தை மூலம்<br>• வாய்மொழி மூலம்<br>• எழுத்து மூலம்<br>• பங்குடைமை ஒப்பந்தம்<br>• பங்குடைமை ஒப்பந்தத்தின் முக்கியத்துவம்<br>• பங்குடைமை ஒப்பந்தத்தில் பொதுவாக உள்ளடக்கப்படும் விடயங்கள். | • பங்குடைமைக் கட்டளைச் சட்டத்திற்கமைய பங்குடைமை வணிகத்தை வரைவிலக்கணப் படுத்துவார்.<br>• பங்குடைமை வணிகமொன்றின் விசேட பண்புகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• பங்குடைமை ஒப்பந்தத்தை விளக்குவார்.<br>• பங்குடைமை ஒப்பந்தமொன்று ஏற்படக்கூடிய முறைகளை விளக்குவார்.<br>• பங்குடைமை ஒப்பந்தமொன்றின் முக்கியத்துவத்தை மதிப்பார்.<br>• பங்குடைமை ஒப்பந்தமொன்றில் பொதுவாக உள்ளடக்கப்படும் விடயங்களை வெளிப் படுத்துவார்.<br>• 1890 ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவின் பரிந்துரைகளை விபரிப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • 1890 ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24ம் பிரிவு.<br>• பங்குடைமை வணிகமொன்றின் அனுகூலங்களும் வரை யறைகளும்<br>• பங்குடைமை வணிகங்களைப் பதிவு செய்தல். | • பங்குடைமை வணிகமொன்றைப் பதிவு செய்யும் நடைமுறைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவார்.<br>• பங்குடைமை வணிகமொன்றின் அனுகூலங்களையும் வரையறைகளையும் பட்டியல் படுத்துவார்.<br>• தனியாளுரிமை வணிகம், பங்குடைமை வணிகம் என்பவற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுக் காட்டுவார். | |
| | 4.4 பல்வேறு வகையான கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளையும் அவற்றின் விசேட பண்புகளையும் ஒப்பிடுவார். | • கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்<br>• விளக்குதல்<br>• விசேட பண்புகள்<br>• கம்பனிகளின் அனுகூலங்களும் வரையறைகளும்<br>• கம்பனியினைக் கூட்டிணைத்தல்<br>• கம்பனி வகைகள்<br>• வரையறுக்கப்பட்ட கம்பனிகள்<br>• வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள்<br>• வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள்<br>• வரையறுக்கப்பட்ட கரை கடந்த கம்பனிகள்<br>• வரையறுக்கப்படாத கம்பனிகள்<br>• உத்தரவாதத்தால் வரை யறுக்கப்பட்ட கம்பனிகள்<br>• வெளிநாட்டுக் கம்பனிகள் | • கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை விளக்குவார்.<br>• கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் விசேட பண்புகளை விளக்குவார்.<br>• வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் அனுகூலங்களையும் வரையறைகளையும் பட்டியல்படுத்துவார்.<br>• கம்பனியொன்றினைக் கூட்டிணைப்புச் செய்யும் நடைமுறையினை விளக்குவார்.<br>• கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினை பதிவு செய்யும்பொழுது பயன்படுத்தப்படும் ஆவணங்களை விளக்குவார்.<br>• கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளை வகைப் படுத்துவார்.<br>• ஒவ்வொரு கம்பனி வகைகளினதும் பண்புகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஒவ்வொரு வகைக் கம்பனிகளுக்குமான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• கூட்டிணைக்கப்பட்ட கம்பனி வகைகளை ஒப்பிடும் நியதிகளை தெளிவுபடுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • கூட்டிணைக்கப்பட்ட கம்பனி வகைகளை ஒப்பிடல்.<br>• அங்கத்தவர்களின் எண்ணிக்கை<br>• பொறுப்புக்கள்<br>• மூலதனம் ஈட்டல்<br>• நிர்வாகமும் முகாமையும் | • நியதிகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டிணைக்கப்பட்ட கம்பனி வகைகளை ஒப்பிடுவார்.<br>• வழங்கப்படும் வணிகங்களின் பெயர்களுக்கேற்ப அது எவ்வகை வணிக அமைப்பு வகையைச் சார்ந்தது என்பதைச் சரியாகக் குறிப்பிடுவார். | |
| | 4.5 கூட்டுறவு வணிகங்களின் சிறப்புப் பண்புகளைக் கேட்டறிந்து அவற்றின் போக்குகளைப் பகுப்பாய்வு செய்வார். | • கூட்டுறவு வணிகங்கள்<br>• விளக்குதல்<br>• விசேட பண்புகள்<br>• கூட்டுறவுக் கொள்கைகள்<br>• கூட்டுறவு வணிகத்தின் அனுகூலங்களும் வரையறைகளும்<br>• கூட்டுறவு சங்கங்களைப் பதிவு செய்தல்.<br>• கூட்டுறவு வணிகத்தின் போக்கு | • கூட்டுறவு வணிகத்தை விளக்குவார்.<br>• கூட்டுறவு வணிகங்களின் விசேட பண்புகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• கூட்டுறவின் கொள்கைகளை அறிந்து கொள்வார்.<br>• கூட்டுறவு வணிகத்தின் அனுகூலங்களையும் வரையறைகளையும் பட்டியற்படுத்துவார்.<br>• கூட்டுறவுச் சங்கமொன்றைப் பதிவு செய்யும் நடைமுறைகளை விளக்குவார்.<br>• கூட்டுறவு வணிகத்தின் போக்குகளைப் பட்டியல் படுத்துவார்.<br>• கூட்டுறவு வணிகத்தின் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை முன்மொழிவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.6 விசேட வணிகங்களின் சிறப்புப் பண்புகளைக் கேட்டறிந்து அவற்றின் அனுகூலங்கள் வரையறைகளைத் தேடியறிவார். | • அங்கீகார வணிகம்<br>• அங்கீகாரம் வழங்குபவர்<br>• அங்கீகாரம் பெறுபவர்<br>• அங்கீகாரம் வழங்குபவர் அங்கீகாரம் பெறுபவருக்கு வழங்கும் வசதிகள்<br>• அங்கீகார வணிக வகைகள்<br>• அங்கீகார வணிகங்களின் அனுகூலங்களும் வரையறைகளும்<br>• வணிகங்களை இணைத்தல்<br>• ஒன்றிணைத்தல்<br>• கையகப்படுத்தல் (உரிமையாக்குதல்) | • அங்கீகார வணிகத்தை அறிந்து விளக்குவார்.<br>• அங்கீகார வணிகத்துடன் தொடர்புடைய பிரிவினர்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• அங்கீகாரம் வழங்குபவர், அங்கீகாரம் பெறுபவர் என்பவர்களுக்கிடையே காணப்படும் இடைத் தொடர்பினை விளக்குவார்.<br>• அங்கீகாரம் வழங்குபவர் அங்கீகாரம் பெறுபவருக்கு வழங்கும் வசதிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• அங்கீகார வணிகங்களை வகைப்படுத்துவார்.<br>• அங்கீகார வணிகங்களின் அனுகூலங்களையும் வரையறைகளையும் சுட்டிக் காட்டுவார்.<br>• அங்கீகார வணிகங்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• வணிகங்கள் ஒன்றிணையும் முறைகளை விளக்குவார். | 08 |
| | 4.7 அரச துறை வணிக அமைப்புக்களின் பண்புகளைக் கேட்டறிந்து அவ் வணிகங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார். | • அரசு வணிகங்களை நடாத்திச் செல்வதற்கான காரணங்கள்.<br>• அரசதுறை வணிக அமைப்புக்கள்<br>• அரச கூட்டுத்தாபனங்கள்<br>• அரச திணைக்களங்கள்<br>• உள்ளூராட்சி அதிகார சபையின் கீழ் செயற்படும் வணிகங்கள்<br>• அரச கம்பனிகள்<br>• அரச துறை வணிக அமைப்புக்களின் பண்புகள் | • வணிகக் கருமங்கள் அரசின் கீழ் நடாத்திச் செல்வதற்கான காரணங்களைக் கேட்டறிவார்.<br>• அரச துறை வணிக அமைப்புக்களை வகைப்படுத்துவார்.<br>• அரச துறை வணிகங்களுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• அரச துறை வணிக அமைப்புக்களின் பண்புகளைக் கேட்டறிவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **5.0 சமூக பொருளாதார தனியாள் விருத்திக்காக முயற்சி யாண்மையின் பங்களிப்பினை மதிப்பார்.** | | | | 20 |
| | 5.1 முயற்சியாண்மையின் முக்கியத் துவம், அனுகூலங்கள் என்பவற்றை அறிந்து முயற்சியாளரொருவராவதற்கான அக்கறையினை வெளிப்படுத்துவார். | • முயற்சியாண்மை<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்குமிடையிலான தொடர்பு<br>• முயற்சியாண்மையின் அனுகூலங்கள்<br>• தனியாள்<br>• நிறுவன<br>• சமூகமும் பொருளாதாரமும்<br>• முயற்சியாண்மையும் பொருளாதார அபிவிருத்தியும்<br>• முயற்சியாண்மையின் போக்குகள் | • ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களை கற்பதன் மூலம் முயற்சியாண்மை தொடர்பான வரைவிலக்கணமொன்றைக் கட்டியெழுப்புவார்.<br>• முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை மதிப்பார்.<br>• முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்குமிடையிலான தொடர்பினை விளக்குவார்.<br>• முயற்சியாண்மையினால் தனிநபருக்கும் நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் கிடைக்கும் அனுகூலங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• தெரிவு செய்த முயற்சியாண்மையொன்றைக் கவனத்தில் கொண்டு அதன் மூலம் முயற்சியாளருக்கும் நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் பொருளாதாரத்திற்கும் கிடைக்கும் அனுகூலங்களை வெவ்வேறாகக் கோவைப்படுத்துவார்.<br>• முயற்சியாண்மைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையிலான தொடர்பை விளக்குவார். | 06 |
| | 5.2 முயற்சியாண்மைச் செயன்முறைகளை அறிந்து கொள்வார். | • முயற்சியாண்மைச் செயன்முறை<br>• முயற்சியாண்மைச் செயன்முறையின் படிமுறைகள்<br>• புத்தாக்கம் புனைதலும் தேடியறிதலும் (Innovation and Discovery)<br>• எண்ணக்கருக்களைக் கட்டியெழுப்புதலும் வணிகத் திட்டத்தைத் தயாரித்தலும் (Concept development) | • முயற்சியாண்மையானது செயல்முறையொன்றாகும் என்பதனை உறுதிப்படுத்துவார்.<br>• முயற்சியாண்மைச் செயல்முறைகளை அறிமுகப்படுத்துவார்.<br>• முயற்சியாண்மைச் செயல்முறைகளின் படிமுறைகளைப் பட்டியலப்படுத்துவார்.<br>• முயற்சியாண்மைச் செயல்முறைகளை அட்டவணை மூலம் சுட்டிக் காட்டுவார்.<br>• முயற்சியாண்மை செயல்முறையின் ஒவ்வொரு படிமுறைகளையும் விபரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளல். (Rusourcing)<br>• உண்மைநிலைக்கு மாற்றுதல் (Actualization).<br>• பயன்களைப் பெற்றுக் கொள்ளல் (Harvesting) | | |
| | 13.7 இருப்புக் கிரயம் தொடர்பில் கவனம் செலுத்தி பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைக் கணிப்பார். | • மொத்த இருப்புக் கிரயம்<br>• இருப்புக் கட்டளையிடும் கிரயம்<br>• இருப்புப் பேணுதல் கிரயம்<br>• பொருளாதாரக் கட்டளைக் கணியம்<br>• கணித்தல்<br>• சூத்திர / சமன்பாட்டு முறை<br>• வரைபு முறை | • இருப்புத் தொடர்பான கிரயத்தை வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• இருப்புக் கிரய வகைகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துவார்.<br>• பொருளாதாரக் கட்டளைக் கணியம் என்பதைத் தெளிவுபடுத்துவார்.<br>• சூத்திர முறைக்கேற்ப பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைக் கணிப்பிடுவார்.<br>• இருப்பு தொடர்பான கிரய வகைகளை வரைபு ரீதியாகக் காட்டி, பொருளாதாரக் கட்டளை கணியத்தினைக் கணிப்பிடுவார். | 05 |
| | 13.8 வெளியீடுகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக தரக் கட்டுப்பாட்டு முறைகளைத் தேடியறிவார். | • தரம்<br>• தரக் கட்டுப்பாடு<br>• தரக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்<br>• தரக் கட்டுப்பாட்டு நுட்ப முறைகள்<br>• தரவட்டம்<br>• பூச்சிய வழு | • வெளியீட்டின் தரம் என்பதனை தெளிவு படுத்துவார்.<br>• தரக் கட்டுப்பாடு என்பதனை தெளிவுபடுத்துவார்.<br>• தரக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை மதிப்பார்.<br>• தரக் கட்டுப்பாட்டு நுட்பமுறைகளை விபரிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • தரப்பாதுகாப்பு<br>• தர நியமம்<br>• புள்ளி விபர ரீதியான தரக் கட்டுப்பாடு | | |
| | 13.9 செயற்பாட்டு விளைதிறனை மேம்படுத்துவதற்கான முறைகளைத் தேடியறிவார். | • விளைதிறன் (பயனுறுதி)<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• விளைதிறனை மேம்படுத்திக் கொள்ளல்.<br>• பண்டங்களின் விளை திறனை மேம்படுத்துதல்.<br>• இயந்திர விளைதிறனை மேம்படுத்துதல்.<br>• ஊழிய விளைதிறனை மேம்படுத்துதல். | • விளைதிறனை விளக்குவார்.<br>• விளைதிறனை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய முறைகளை விபரிப்பார்.<br>• பொருளின் விளைதிறனை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• இயந்திர விளைதிறனை மேம்படுத்திக் கொள்ளக் கூடிய முறையினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• ஊழிய விளைதிறனை மேம்படுத்திக் கொள்ளக் கூடிய முறையினைத் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 14.0 வணிகத்தின் வெற்றிக்கு சந்தைப் படுத்தல் முகாமைத் துவத்தின் பங்களிப் பினை மதிப் பார். | | | | 45 |
| | 14.1 சந்தைப்படுத்த லுக்கு அடிப்படை யாகவுள்ள அடிப் படை எண்ணக் கருக்களைத் தேடி யறிவார். | • சந்தைப்படுத்தல்<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• சந்தைப்படுத்தலுக்குச் சார் பான எண்ணக்கருக்கள்<br>• தேவைகள், விருப்பங்கள், கேள்வி<br>• உற்பத்தி<br>• பெறுமதியும் திருப்தியும்<br>• பரிமாற்றம், கொடுக்கல் வாங்கல், தொடர்பு<br>• சந்தை | • வரைவிலக்கணங்களின் உதவியுடன் சந்தைப் படுத்தலை விளக்குவார்.<br>• சந்தைப்படுத்தலின் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்துவார்.<br>• சந்தைப்படுத்தலுக்குச் சார்பான எண்ணக்கருக் களைப் பட்டியல்படுத்துவார்.<br>• தேவை, விருப்பம், கேள்வி போன்ற எண்ணக் கருக்களுக்கிடையில் காணப்படுகின்ற தொடர் பினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• உற்பத்தியினை அறிந்து கொள்வார்.<br>• பெறுமதி, திருப்தி போன்ற எண்ணக்கருக்களுக் கிடையிலான தொடர்பு, வேறுபாடு என்பவற்றைத் தெளிவுபடுத்துவார்.<br>• பரிமாற்றம், கொடுக்கல் வாங்கல், தொடர்பு போன்ற எண்ணக்கருக்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• சந்தை என்பதைத் தெளிவுபடுத்துவார்.<br>• சந்தைப்படுத்தலுக்குச் சார்பான எண்ணக்கருக் களுக்கிடையில் காணப்படும் தொடர்புகளைச் சுட்டிக்காட்டுவார். | 06 |
| | 14.2 சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களின் பரம்பலைத் தேடி யறிந்து பல்வேறு சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை ஒப்பிடுவார். | • சந்தைப்படுத்தல் தத்துவங்கள் (எண்ணக்கருக்கள்)<br>• சந்தைப்படுத்தல் எண்ணக் கருக்களின் பரம்பல்<br>• உற்பத்தி எண்ணக்கரு<br>• உற்பத்திப்பொருள் எண்ணக்கரு<br>• விற்பனை எண்ணக்கரு | • சந்தைப்படுத்தல் எண்ணக்கரு என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• சந்தைப்படுத்தல் எண்ணக்கரு ஒவ்வொன்றையும் தெளிவுபடுத்துவார்.<br>• சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களை ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வு செய்வார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • சந்தைப்படுத்தல் எண்ணக்கரு<br>• சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு<br>• வாடிக்கையாளர் எண்ணக்கரு<br>• முழுமையான (Holistic) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | • காலத்திற்கேற்ப சந்தைப்படுத்தல் எண்ணக்கரு மாற்றமடைந்த முறையினை விபரிப்பார்.<br>• நடைமுறையில் செயற்படுகின்ற நிறுவனமொன்று பின்பற்றுகின்ற சந்தைப்படுத்தல் எண்ணக்கரு/ எண்ணக்கருக்களைத் தேடியாய்வார். | |
| | 14.3 இலக்குச் சந்தைப் படுத்தல் நடை முறையினைத் தேடி யறிவார். | • சந்தைத் துண்டமாக்கல்<br>• சந்தைத் துண்டமாக்கலின் நன்மைகள்<br>• நுகர்வோர் சந்தைத் துண்ட மாக்கலின் அடிப்படைகள்<br>• இலக்குச் சந்தை<br>• சந்தையினுள் நிலைத்திருத் தல் | • சந்தை துண்டமாக்கல் என்பதற்கு விளக்கம் கூறுவார்.<br>• நுகர்வோர் சந்தைத் துண்டமாக்கலுக்கு பயன் படுத்துகின்ற அடிப்படையினைத் தெளிவுபடுத்துவார்.<br>• சந்தைத் துண்டமாக்கலின் நன்மைகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• இலக்குச் சந்தை என்பதை அறிந்து கொள்வார்.<br>• தெரிவு செய்த உற்பத்திப் பொருளொன்றிற்கான சந்தைத் துண்டமாக்கலைச் செய்து காட்டுவார்.<br>• சந்தையில் நிலைத்திருக்கக்கூடிய முறைகளைச் சுட்டிக்காட்டுவார். | 04 |
| | 14.4 சந்தைப்படுத்தல் கலவையினையும் அதன் மாறிகளை யும் வணிகரினதும் வாடிக்கையாளரின தும் பார்வையில் தேடியறிவார். | • பொருட்களின் சந்தைப்படுத் தல் கலவை - வணிகரின் பார்வையில் (4Ps)<br>• உற்பத்தி (Product)<br>• விலை (Price)<br>• இடம் (Place)<br>• மேம்படுத்தல் (Promotion) | • சந்தைப்படுத்தல் கலவை என்பதை விளக்குவார்.<br>• பொருட்களின் சந்தைப்படுத்தல் கலவை மாறி களை வணிகரின் பார்வையில் அறிந்து கொள்வார்.<br>• சேவைக்கான சந்தைப்படுத்தல் கலவையின் மாறி களை வணிகரின் பார்வையில் அறிந்து கொள் வார்.<br>• சந்தைப்படுத்தல் கலவையினை வாடிக்கையாள ரின் பார்வையில் விபரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | | • சேவைகளுக்கான சந்தைப் படுத்தல் கலவை - வணிகரின் பார்வையில் (7Ps = 4Ps + 3Ps)<br>• ஊழியர்குழு (People)<br>• செயன்முறை (Process)<br>• பௌதீகச் சுற்றுபுறச்சூழல் (Physical Evidence)<br>• சந்தைப்படுத்தல் கலவை - வாடிக்கையாளர்களின் பார்வையில் (4Cs)<br>• நுகர்வோர் தேவைகளும் விருப்பங்களும் (Consumer needs & wants)<br>• கிரயம் (Cost)<br>• வசதி (Convenience)<br>• தொடர்பாடல் (Communication) | • வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்குச் சந்தைப் படுத்தல் கலவையின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார். | |
| | 14.5 சந்தைப்படுத்தக் கூடிய பல்வேறு உற்பத்திகள் காணப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவார். | • உற்பத்திகள்<br>• பொருட்கள்<br>• சேவைகள்<br>• எண்ணங்கள்<br>• துறைகள்<br>• தனிநபர்கள்<br>• செயற்பாடுகள்<br>• அனுபவங்கள்<br>• இடம்<br>• ஒழுங்கமைப்பு<br>• தகவல்கள் | • உற்பத்தியினை விளக்குவார்.<br>• உற்பத்தியை விரிவாக வகைப்படுத்துவார்.<br>• ஒவ்வொரு உற்பத்தி வகையினையும் தெளிவு படுத்துவார்.<br>• ஒவ்வொரு உற்பத்தி வகைக்குமான உதார ணங்களை முன்வைப்பார்.<br>• தற்போதுள்ள உற்பத்திகளை உதாரணமாக எடுத்து அவை எவ்வுற்பத்தி வகையைச் சார்ந் தது என்பதைச் சரியாகக் குறிப்பிடுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 14.6 உற்பத்திப் பொருளொன்றிற்குப் பொருத்தமான சின்னத்தை உருவாக்குவார். | • சின்னமும், வியாபாரக் குறியீடும்<br>• சின்னம்<br>• வியாபாரக்குறி<br>• சின்னத்திற்கும், வியாபாரக் குறியீட்டிற்குமிடையிலான வேறுபாடுகளும் தொடர்புகளும்<br>• சின்னமொன்றில் இருக்க வேண்டிய பண்புகள்<br>• சின்னங்களின் வகைகள்<br>• சின்னங்களினால் கிடைக்கும் பயன்கள்<br>• உற்பத்திக்குப் பொருத்தமான சின்னமொன்றை உருவாக்குதல். | • சின்னத்தையும், வியாபாரக் குறியையும் அறிமுகப் படுத்துவார்.<br>• சின்னமொன்றில் இருக்கவேண்டிய பண்புகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• பல்வேறு சின்ன வகைகளுக்கான உதாரணங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகத்தின் வெற்றிக்கு சின்னமொன்றினால் கிடைக்கும் பயன்களை விளக்குவார்.<br>• உற்பத்திக்குப் பொருத்தமான சின்னமொன்றை உருவாக்குவார். | 04 |
| | 14.7 உற்பத்திக்குக் கவர்ச்சிகரமான பொதியிடலொன்றையும் விபரத்துண்டொன்றையும் (Label) திட்டமிடுவார். | • பொதியிடல்<br>• பொதி<br>• பொதியிடல் வகைகள்<br>• ஆரம்ப (மூலப்) பொதியிடல்<br>• இரண்டாம் நிலைப் பொதியிடல்<br>• போக்குவரத்துப் பொதியிடல்<br>• பொதியிடலொன்றைத் திட்டமிடும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் | • பொதியிடல், பொதி என்பவற்றிற்கு விளக்கம் கூறுவார்.<br>• பொதியிடலின் பல்வேறு மட்டங்களை விளக்குவார்.<br>• பொதியிடலொன்றைத் திட்டமிடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• விபரத்துண்டை அறிமுகப்படுத்துவார்.<br>• விபரத்துண்டொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்டுவார்.<br>• உற்பத்திப் பொருளொன்றிற்கான பொதியிடல் ஒன்றையும், விபரத்துண்டொன்றையும் உருவாக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • விபரத்துண்டு (சுட்டுத்துண்டு) இடுதல்<br>• விபரத்துண்டு<br>• விபரத்துண்டில் உள்ளடங்கும் விடயங்கள் | | |
| | 14.8 உற்பத்திக்குப் பொருத்தமான விலையினைத் தீர்மானிக்கும் முறையினைத் தேடியறிவார். | • விலை<br>• விலையிடலின் நோக்கங்கள்<br>• சந்தையில் நிலைத்திருத்தல்<br>• இலாபத்தை உச்சப்படுத்தல்<br>• சந்தைப்பங்கினை விருத்தி செய்து கொள்ளல்.<br>• சந்தைப் பங்கினை கையகப் படுத்திக் கொள்ளல்<br>• உற்பத்திப் பொருளின் தரத் தில் முன்னுரிமை பெறல்.<br>• விலையிடலின்போது கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் | • ''விலை'' என்பதற்கு விளக்கம் கூறுவார்.<br>• விலையிடலின் நோக்கத்தை விபரிப்பார்.<br>• விலையிடலின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைச் சுட்டிக் காட்டுவார். | 03 |
| | 14.9 உற்பத்திகள் நுகர்வோரைச் சென்றடையக் கூடிய பொருத்த மான விநியோக வழிமுறைகளை முன்மொழிவார். | • விநியோகம்<br>• முக்கியத்துவம்<br>• விநியோக வழிமுறைகள்<br>• பொருட்களின் விநியோகம்<br>• நுகர்வுப்பொருட்களின் விநியோக வழிமுறைகள்<br>• கைத்தொழில் பொருட் களின் விநியோக வழி முறைகள் | • விநியோகம் தொடர்பில் விளக்கம் கூறுவார்.<br>• விநியோகத்தின் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• நுகர்வுப் பொருட்கள், கைத்தொழில் பொருட் களுக்கான விநியோக வழிமுறைகளை விளக்கு வார்.<br>• பொருத்தமான விநியோக வழியொன்றைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண் டிய காரணிகளை இனம் காண்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பொருத்தமான விநியோக வழிமுறையொன்றைத் தீர்மானிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் | • வழங்கப்பட்ட உற்பத்திக்குப் பொருத்தமான விநியோக வழிமுறையொன்றை / வழிமுறைகளை முன்மொழிவார். | |
| | 14.10 உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்குப் பொருத்தமான மேம்படுத்தல் உத்திகளை முன்மொழிவார். | • மேம்படுத்தல்<br>• முக்கியத்துவம்<br>• மேம்படுத்தல் கலவை<br>• விளம்பரம்<br>• விற்பனை மேம்படுத்தல்<br>• தனிப்பட்ட விற்பனைகள்<br>• மக்கள் தொடர்பு<br>• நேரடி விற்பனை<br>• துறைகளும் அனுபவங்களும் | • மேம்படுத்தலுக்கு விளக்கம் கூறுவார்.<br>• மேம்படுத்தலின் முக்கியத்துவத்தை விபரிப்பார்.<br>• வணிகமொன்றிற்கு மேம்படுத்தல் முக்கியத்துவம் பெறும் சந்தர்ப்பங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• மேம்படுத்தல் கலவையின் பிரிவுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• உற்பத்தியொன்றுக்குப் பொருத்தமான மேம்படுத்தல் முறை / முறைகளை முன்மொழிவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 15.0 வணிகத்தின் வெற்றிக்கு நிதி முகாமைத்துவத்தினைப் பயன்படுத்துகின்ற முறையினைத் தேடியறிவார். | | | | 45 |
| | 15.1 வணிகமொன்றின் நிதி முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளைக் கேட்டறிவார். | • நிதி முகாமைத்துவம்<br>• நிதி முகாமைத்துவத்தின் நோக்கம்<br>• நிதி முகாமைத்துவத் தீர்மானங்கள்<br>  • முதலீட்டுத் தீர்மானங்கள்<br>  • நிதித் தீர்மானங்கள்<br>• வணிகமொன்றின் நிதித் திட்டமிடலும், கட்டுப்பாடும்<br>  • வரவு செலவுத்திட்டம்<br>    • காசு வரவு செலவுத்திட்ட அட்டவணை - அறிமுகமும் அதன் பயன்களும்<br>    • மூலதன வரவு செலவுத் திட்ட அட்டவணை - அறிமுகமும் அதன் பயன்களும்<br>  • காசுப்பாய்ச்சல் கூற்று அறிமுகமும் அதன் பயன்களும் | • நிதி முகாமையை அறிமுகம் செய்வார்.<br>• நிதி முகாமையின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• நிதி முகாமையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எடுக்கப்படுகின்ற நிதித் தீர்மானங்களைப் பகுப்பாய்வு செய்வார்.<br>• நிதித் திட்டமிடலினதும் கட்டுப்படுத்தலினதும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுவார்.<br>• நிதித் திட்டமிடல் கட்டுப்படுத்தல் என்பவற்றிற்கு பயன்படுத்தப்படுகின்ற கருவிகளாக வரவு செலவுத்திட்டம், காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தெளிவுபடுத்துவார். | 05 |
| | 15.2 வணிகமொன்றின் நிதித் தேவையினை நிறைவு செய்வதற்காகவுள்ள மாற்று நிதியீட்டல் முறைகளை மதிப்பிடுவார். | • வணிகமொன்றின் நிதித் தேவைகள்<br>  • நீண்டகால நிதித்தேவை<br>  • குறுங்கால நிதித்தேவை<br>• நிதியீட்டல் வழிமுறைகள் | • வணிகமொன்றின் நிதியீட்டல் தேவைப்பாட்டினைப் பட்டியல்படுத்துவார்.<br>• வணிகமொன்றின் நிதித் தேவைகளை வகைப்படுத்துவார்.<br>• நிதியீட்டல் வழிமுறைகளைப் பல்வேறு அடிப்படைகளினூடாக வகைப்படுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • நிதியீட்டல் வழிமுறைகளை வகைப்படுத்துதல்<br>• உள்ளக - வெளியக<br>• நேர் - நேரில்<br>• நீண்டகால - குறுங்கால<br>• நிதித்தேவையினை நிறைவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்<br>• மாற்று நிதியீட்டல் வழிமுறைகளின் நன்மைகளும் வரையறைகளும் | • மாற்று நிதியீட்டல் வழிமுறைகளிலுள்ள அனுகூலங்களையும் வரையறைகளையும் விளக்குவார்.<br>• பல்வேறு நிதியீட்டல் வழிமுறைகளுக்கான உதாரணங்களை முன்வைப்பார்.<br>• நிதித் தேவைகளை நிறைவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• வழங்கப்படுகின்ற வணிக நிறுவனமொன்றிற்குப் பொருத்தமான நிதியீட்டல் வழிமுறைகளை முன்மொழிவார். | |
| | 15.3 மாற்று முதலீட்டு வழிமுறைகளை அறிந்து கொள்வார். | • முதலீடு அறிமுகம்<br>• முதலீட்டு வழிமுறைகள் / தீர்மானங்கள்<br>• நீண்டகால முதலீட்டு வழிமுறைகள்<br>• நடைமுறை அல்லாத சொத்துக்களில் முதலீடு<br>• மூலதனச் சந்தைக்கருவிகளில் முதலீடு<br>• குறுங்கால முதலீட்டு வழிகள் | • முதலீட்டினை அறிந்து கொள்வார்.<br>• முதலீட்டுத் தீர்மானம் என்பதை தெளிவுபடுத்துவார்.<br>• முதலீட்டு தீர்மானங்களை குறுங்காலம், நீண்டகாலம் என வகைப்படுத்திக் காட்டுவார்.<br>• வணிக வெற்றிக்கு முதலீட்டுத் தீர்மானங்களின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 15.4 நிதி விகிதங்களைப் பயன்படுத்தி வணிகத்தின் நிதி நிலைமையினைப் பகுப்பாய்வு செய்வார். | • நிதிப் பகுப்பாய்வு<br>• நிதிக் கூற்றுக்கள்<br>• நிதி விகிதங்கள்<br>• இலாபத்தன்மை விகிதம்<br>• திரவத்தன்மை விகிதம்<br>• நிதி நிலைப்புத் தன்மை விகிதம்<br>• விளைவு (செயற்பாட்டு) விகிதம்<br>• முதலீட்டு விகிதம் | • நிதிப் பகுப்பாய்விற்கு நிதிக்கூற்று உதவுகின்ற முறையினைத் தெளிவுபடுத்துவார்.<br>• நிதி முகாமையாளருக்கு முக்கியத்துவமாக அமையும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் தெளிவு படுத்துவார்.<br>• நிதிப் பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்படுகின்ற பிரதான முறையொன்றாகிய விகிதப் பகுப்பாய் வினை விபரிப்பார்.<br>• வழங்கப்பட்ட தரவுகளின் உதவியுடன் நிதி விகி தங்களைக் கணிப்பிடுவார்.<br>• சரியான நிதித் தீர்மானங்களை எடுப்பதற்கு நிதி விகிதப் பகுப்பாய்வினைப் பயன்படுத்துவார். | 06 |
| | 15.5 நிதி முகாமைத் துவத்துடன் தொடர் புடைய நிதிச்சந்தை யின் பங்களிப்பினை அறிந்துகொள்வார். | • இலங்கையின் நிதி முறைமை<br>• விளக்குதல்<br>• கட்டமைப்பு<br>• நிதி நிறுவனங்கள்<br>• நிதிக் கருவிகள்<br>• நிதி உட்கட்டமைப்பு வசதி<br>• நிதிச் சந்தை<br>• மத்திய வங்கி | • இலங்கையின் நிதி முறைமையினை அறிந்து கொள்வார்.<br>• இலங்கையின் நிதி முறைமையின் கட்டமைப் பினை விபரிப்பார். | 03 |
| | 15.6 இலங்கையின் நிதிச் சந்தையின் செயற்பாடுகளை அறிந்துகொள்வார். | • நிதிச் சந்தை<br>• பணச் சந்தை<br>• மூலதனச் சந்தை<br>• நிதிச் சந்தைக் கட்டமைப்பு<br>• வங்கிகளுக்கிடையிலான இணைந்த கடன் சந்தை<br>• உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தை | • நிதிச் சந்தையினை அறிந்து கொள்வார்.<br>• நிதிக்கருவிகளின் காலாவதியாகும் (முதிர்வு) காலத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிச் சந்தையினை வகைப்படுத்துவார்.<br>• நிதிச் சந்தையின் கட்டமைப்பினைச் சுட்டிக் காட்டுவார்.<br>• பணச் சந்தையின் துணைச் சந்தைகளை வெவ்வேறாக விபரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அரசின் பிணைப்பத்திர சந்தை<br>• கூட்டிணைக்கப்பட்ட கடன் பிணைப்பத்திர சந்தை (தொகுதிக்கடன் சந்தை)<br>• பங்குச் சந்தை<br>• நிதிச் சந்தையில் பரிமாற்றப் படுகின்ற நிதிக்கருவிகள் | • மூலதனச் சந்தையின் துணைச் சந்தைகளை வெவ்வேறாக விபரிப்பார்.<br>• நிதிச் சந்தையில் பரிமாற்றப்படுகின்ற நிதிக்கருவி களை விபரிப்பார். | |
| | 15.7 கொழும்புப் பங்கு பரிமாற்றகத்துடன் இணைந்த கருமங்களைத் தேடியறிவார். | • கொழும்புப் பங்கு பரிமாற்றகம்<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• முதலாம் தரச்சந்தையும் இரண்டாம் தரச்சந்தையும்<br>• கம்பனியொன்று கொழும்புப் பங்கு பரிமாற்றகத்தில் பதிவு செய்து கொள்ளக்கூடிய முறைகள்<br>• பொதுமக்களுக்கான வெளி யீடுகள் மூலம்<br>• விற்பனை மூலமான வழங் கல் மூலம்<br>• அறிமுகப்படுத்துதல் மூலம் | • கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தினை விளக்குவார்.<br>• இலங்கையின் பொருளாதாரத்திற்கு கொழும்புப் பங்குப் பரிமாற்றகம் முக்கியத்துவம் பெறுகின்ற முறையினை விளக்குவார்.<br>• முதலாம் நிலை, இரண்டாம் நிலைப் பங்குச் சந்தைகளுக்கிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் பதிவு செய்யக்கூடிய முறை யினைத் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 15.8 பங்குச் சந்தையில் பரிமாற்றம் செய்யப்படும் பிணைப் பத்திரங் களையும் அவற்றின் நன்மைகளையும் அறிந்து கொள்வார். | • கொழும்புப் பங்கு பரிமாற்றகத்தில் பரிமாற்றம் செய்யப்படும் பிணைப்பத்திரங்கள்.<br>• சாதாரண பங்குகள்<br>• முன்னுரிமைப் பங்குகள்<br>• பங்கு உத்தரவுப் பத்திரம்<br>• கம்பனித் தொகுதிக்கடன்கள்<br>• அரச பிணைப் பத்திரங்கள்<br>• பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்வதன் அனுகூலங்கள்<br>• நேர் அனுகூலங்கள்<br>• பங்கிலாபம்<br>• வட்டி<br>• ஒதுக்கங்களை மூலதனமாக்கல்<br>• உரிமை வழங்கல்<br>• மூலதன இலாபம்<br>• பகிர்வு (Spliting)<br>• நேரில் அனுகூலங்கள் | • கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் பரிமாறப்படுகின்ற பிணைப்பத்திரங்களைப் பட்டியல் படுத்துவார்.<br>• கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தில் பரிமாறப்படுகின்ற ஒவ்வொரு பிணைப்பத்திரங்களையும் விபரிப்பார்.<br>• பிணைப்பத்திர முதலீடுகளின் நேர், நேரில் அனுகூலங்களைத் தனித்தனியாக தெளிவுபடுத்துவார். | 06 |
| | 15.9 கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தின் செயலடைவினை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவார். | • பங்குச் சந்தையின் சுட்டிகள்<br>• அனைத்துப் பங்கு விலைச் சுட்டி (ASPI)<br>• S&P - சிறிலங்கா 20 விலைச் சுட்டி<br>• மொத்த வருமானச்சுட்டி (TRI)<br>• பங்குச் சந்தைச் சுட்டிகளின் முக்கியத்துவம் | • பங்குச் சந்தையின் செயற்பாட்டு அடைவினை அளப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற விலைச் சுட்டிகளைக் குறிப்பிடுவார்.<br>• பங்குச் சந்தையின் ஒவ்வொரு விலைச்சுட்டிகளையும் தெளிவுபடுத்துவார்.<br>• பங்குச் சந்தை விலைச்சுட்டிகளின் முக்கியத்துவத்தை மதிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 16.0 வணிகத்தின் வெற்றிக்கு மனித வளத்தை வினைத்திறனாக பயன்படுத்து கின்ற முறை யினைத் தேடி யறிவார். | | | | 45 |
| | 16.1 மனிதவள முகாமைத்துவத் தின் முக்கியத் துவத்தையும் அதன் கருமங் களையும் தேடி யறிவார். | • மனிதவள முகாமைத்துவம்<br>• விளக்குதல்<br>• ஏனைய வளங்களுடன் ஒப்பிடும்போது மனித வளத்தின் சிறப்புத்தன்மை<br>• மனிதவள முகாமைத்துவத் தின் நோக்கங்களும் முக்கி யத்துவமும்<br>• மனிதவள முகாமைத்துவத் தின் கருமங்கள் | • மனிதவள முகாமைத்துவத்தை அறிந்து கொள்வார்.<br>• ஏனைய வளங்களுடன் ஒப்பிடும்போது மனித வளத்தில் காணப்படுகின்ற சிறப்புத்தன்மை யினைத் தெளிவுபடுத்துவார்.<br>• மனிதவள முகாமைத்துவத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• மனிதவள முகாமைத்துவத்தின் முக்கியத் துவத்தை சுட்டிக் காட்டுவார்.<br>• மனிதவள முகாமைத்துவத்தின் கருமங்களைப் பட்டியல்படுத்துவார். | 04 |
| | 16.2 தொழில் உருவாக் கத்தினதும், தொழில் பகுப் பாய்வினதும் முக்கியத்துவத்தை மதிப்பார். | • தொழில் உருவாக்கம்<br>• தொழில் பகுப்பாய்வு<br>• தொழில் விபரம் (Job discription)<br>• தொழில் நியமம் (Job specification) | • தொழில் உருவாக்கத்தை அறிந்து கொள்வார்.<br>• தொழில் பகுப்பாய்வினைத் தெளிவுபடுத்துவார்.<br>• தொழில் விபரத்திலும் தொழில் நியமத்திலும் உள்ளடங்கும் தகவல்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• தெரிவு செய்த தொழிலொன்றுக்கான தொழில் விபரத்தையும் தொழில் நியமத்தையும் தயாரிப் பார். | 06 |
| | 16.3 அமைப்பொன்றின் வாழ்தன்மைக்குத் தேவையான மனித வளத் திட்டத்தைத் தயாரிப்பார். | • மனித வளத் திட்டமிடல்<br>• மனித வளத் திட்டமிடலின் முக்கியத்துவம்<br>• மனித வளத்தினைத் திட்ட மிடும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங் கள். | • மனிதவளத் திட்டமிடலை அறிந்து கொள்வார்.<br>• மனிதவளத் திட்டமிடலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• மனித வளத் திட்டமிடலில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களைத் தேடியறிவார்.<br>• மனித வளத் திட்டமிடலின் படிமுறைகளை ஒழுங்குபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • மனித வளத் திட்டமிடலின் படிமுறைகள்<br>• மனிதவளத்திற்கான கேள்வி யினை எதிர்வு கூறுதல்.<br>• தற்போது காணப்படுகின்ற மனித வளத்தினைப் பகுப் பாய்வு செய்தல்.<br>• அக ஊழியர் வழங்களைத் திட்டமிடுதல்.<br>• புற ஊழியர் வழங்களைத் திட்டமிடுதல். | • வழங்கப்படுகின்ற நிறுவனமொன்றின் எதிர்கால மனித வளத் தேவைகளை எதிர்வு கூறுவார். | |
| | 16.4 அமைப்பொன்றின் வேலைக்குப் பொருத்தமான நபர்களை ஈர்த் தெடுக்கக்கூடிய வழிகளை அறிந்து கொள்வார். | • ஊழியர் ஈர்ப்பு<br>• ஊழியர்களை ஈர்க்கக்கூடிய வழிகள்<br>• உள்ளக (அக) ஈர்ப்பு முறை கள்<br>• வெளியக (புற) ஈர்ப்பு முறை கள்<br>• அக, புற ஈர்ப்பு முறைகளி லுள்ள அனுகூலங்களும் பிரதி கூலங்களும் | • ஊழியர் ஈர்ப்பு என்பதனை அறிந்து கொள்வார்.<br>• ஊழியர்களை ஈர்க்கக்கூடிய வழிகளைத் தெளிவு படுத்துவார்.<br>• உள்ளக (அக) ஈர்ப்பு வழிகளுக்கான உதார ணங்களைக் குறிப்பிடுவார்.<br>• வெளியக (புற) ஈர்ப்பு வழிகளுக்கான உதார ணங்களைக் குறிப்பிடுவார்.<br>• உள்ளக, வெளியக ஈர்ப்புமுறைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பட்டியல்படுத்துவார்.<br>• தெரிவு செய்த வணிகமொன்று ஊழியர் ஈர்ப்பிற்கு எடுக்கக்கூடிய நடைமுறைகளை முன்மொழிவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 16.5 ஊழியர்களை ஈர்த்தெடுப்பதற்குத் தொழில் அறிவித் தலைத் தயாரிப் பார். | • தொழில் அறிவித்தல்<br>• தொழில் அறிவித்தலொன்றில் உள்ளடங்கும் தகவல்கள்<br>• தொழில் அறிவித்தல்கள் வெளியிடப்படும் இடங்கள்<br>• அறிவித்தல் பலகை<br>• பத்திரிகைகள்<br>• இணையம்<br>• தொலைக்காட்சி<br>• ஏனையவை | • தொழில் அறிவித்தலொன்றில் உள்ளடக்கப்படும் தகவல்களின் பட்டியலொன்றைத் தயாரிப்பார்.<br>• தொழில் அறிவித்தல் வெளியிடப்படும் ஊடகங் களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வழங்கப்படுகின்ற பதவியொன்றிற்கு தொழில் அறிவித்தலொன்றைத் தயாரிப்பார். | 05 |
| | 16.6 ஈர்ப்புச் செய்த விண்ணப்பதாரி களில் தகுதியான விண்ணதாரி களைத் தெரிவு செய்வதற்குப் பொருத்தமான முறைகளை முன்மொழிவார். | • தெரிவு செய்தல்<br>• தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண் டிய விடயங்கள்<br>• அறிவு<br>• திறன்<br>• மனப்பாங்கு<br>• உடல், உள ரீதியான பொருத்தப்பாடு<br>• தெரிவு செய்யும் முறைகள்<br>• விண்ணப்பங்களை மதிப் பிடல்<br>• நேர்முகப்பரீட்சை<br>• உளச்சார்ப்புப் பரீட்சை<br>• ஆளுமைப் பரீட்சை<br>• செயற்பாட்டுப் பரீட்சை<br>• வைத்திய சோதனை<br>• பின்னணிச் சோதனை | • தெரிவு செய்தலை அறிந்து கொள்வார்.<br>• ஊழியர்களைத் தெரிவு செய்யும்போது கவனத் தில் கொள்ளவேண்டிய விடயங்களைத் தெளிவு படுத்துவார்.<br>• தெரிவு செய்யும் பல்வேறு முறைகளைப் பட்டியல் படுத்துவார்.<br>• தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு முறைகளையும் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 16.7 இணைத்துக் கொள்ளும் (ஆட்சேர்க்கும்) நடைமுறைகளை அறிந்து கொள்வார். | • ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் அடிப்படைகள்<br>•நிலையான அடிப்படை<br>•தற்காலிக அடிப்படை<br>• நியமனக் கடிதம் / தொழில் ஒப்பந்தம்<br>•நியமனக் கடிதமொன்றின் முக்கியத்துவம்<br>•நியமனக் கடிதமொன்றில் உள்ளடங்கும் விடயங்கள்<br>•நியமனக் கடிதமொன்றின் மாதிரி<br>• தகைமை காணும் கால வரையறை<br>• வேலையில் அமர்த்துதல் | • ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யும் முறைகளை விளக்குவார்.<br>• ஊழியர்களை இணைத்துக் கொள்வதுடன் தொடர்புடைய நியமனக் கடிதத்தைத் தெளிவு படுத்துவார்.<br>• நியமனக் கடிதமொன்றின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• நியமனக் கடிதமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• நியமனக் கடிதமொன்றின் மாதிரியினைத் தயாரிப்பார்.<br>• வேலையில் அமர்த்துதல் என்பதைத் தெளிவு படுத்துவார்.<br>• தகைமை காணும் காலம் என்பதை விபரிப்பார். | 05 |
| | 16.8 அமைப்பொன்றின் மனித வளத்தின் அபிவிருத்திக்கும் அதனைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கும் எடுக்க வேண்டிய நடைமுறைகளை முன்மொழிவார். | • செயலடைவு மதிப்பீடு<br>• பயிற்சியும் விருத்தியும்<br>•பயிற்சியளிக்கும் முறைகள்<br>•விருத்தி செய்யும் முறைகள்<br>•பயிற்சியளித்தல், விருத்தி செய்தலின் அனுகூலங்கள்<br>•ஊழியர்களுக்கு<br>•வேலை வழங்குனர்களுக்கு<br>• ஊழியர் அசைவு<br>•பதவி உயர்வு<br>•இடமாற்றம்<br>•பதவிநீக்கம்<br>•வேலையை முடிவுறுத்தல் | • செயலடைவு மதிப்பீடு என்பதைத் தெளிவு படுத்துவார்.<br>• பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமிடையில் காணப் படும் வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.<br>• பயிற்சியளித்தல், அபிவிருத்தி செய்தல் முறை களை வெவ்வேறாக விபரிப்பார்.<br>• பயிற்சியளித்தல், அபிவிருத்தி செய்தல் மூலம் ஊழியர்களுக்கும் வேலை வழங்குநர்களுக்கும் கிடைக்கும் அனுகூலங்களை வெவ்வேறாகக் குறிப்பிடுவார்.<br>• ஊழியர் அசைவினை விபரிப்பார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 16.9 மனித வள முகாமைத்துவத் தின் வெற்றியை மதிப்பிடுவதற்கான நியதிகளைத் தேடியறிவார். | • மனித வள முகாமைத்துவத் தின் கருமங்களை மதிப்பிடும் நியதிகள்<br>• ஊழியர் புரள்வு<br>• ஊழியர் வரவீனம்<br>• ஊழியர் விளைதிறன்<br>• தொழில் உறவுகள்<br>• சிறந்த தொழில் உறவு களின் அனுகூலங்கள்<br>• பாதகமான தொழில் உறவு களின் பிரதிகூலங்கள் | • மனித வள முகாமைத்துவத்தின் செயற்பாட்டு அடைவினை மதிப்பிடும் நியதிகளைப் பட்டியற் படுத்துவார்.<br>• அந்த ஒவ்வொரு நியதிகளையும் தெளிவு படுத்துவார்.<br>• தொழில் உறவுகள் என்பதை அறிந்து கொள் வார்.<br>• சிறந்த ஊழியர் தொடர்பின் அனுகூலங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• பாதகமான ஊழியர் தொடர்பின் பிரதிகூலங்களை சுட்டிக் காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| **17.0 வணிகங்களின் வெற்றிக்கு தகவல் முறைமையின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்கின்ற முறையினைத் தேடியறிவார்.** | | | | 35 |
| | 17.1 தரவுகளை உருவாக்குகின்ற முறைகளை கேட்டறிந்து தகவல்களை வகைப்படுத்துவார். | • தரவுகள்<br>• தகவல்கள்<br>• தரவுக்கும் தகவலுக்குமிடையிலான வேறுபாடு<br>• தரவு உருவாக்கம்<br>  • கருமங்கள்<br>  • தொழில்நுட்பம்<br>• தகவல்களின் பண்புகள்<br>• தகவல்களை வகைப்படுத்துதல் | • தரவுக்கும் தகவலுக்கும் வரைவிலக்கணம் கூறுவார்.<br>• தரவு, தகவல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுவார்.<br>• தரவு உருவாக்கச் செயன்முறையினைத் தெளிவுபடுத்துவார்.<br>• தகவல்களின் பண்புகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• தகவல்களைப் பல்வேறு நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவார்.<br>• வழங்கப்பட்ட தரவுகளின் உதவியுடன் தேவையான தகவல்களை உருவாக்குவார். | 05 |
| | 17.2 வணிகமொன்றின் தகவல் முறைமையில் காணப்படும் முக்கியத்துவத்தையும் தொழிற்பாடுகளையும் தேடியறிவார். | • தகவல் முறைமை<br>• தகவல் முறைமையின் தேவைப்பாடும் முக்கியத்துவமும்<br>• தகவல் முறைமையொன்றின் தொழிற்பாடுகள் | • தகவல் முறைமை என்பதை அறிந்து கொள்வார்.<br>• தகவல் முறைமையொன்றின் தேவைப்பாட்டையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்துவார்.<br>• தகவல் முறைமையொன்றின் தொழிற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 17.3 தகவல் முறைமையினை வகைப் படுத்தும் முறைகளைக் கேட்டறிந்து பயன்பாட்டு (பிரயோக) மட்டத் திற்கேற்ப, தகவல் முறைமையினை வகைப்படுத்து வார். | • தகவல் முறைமைகளின் வகைப்படுத்தல்கள்<br>• பயன்பாட்டு மட்டத்திற்கேற்ப<br>• பயன்பாட்டிற்கேற்ப<br>• முகாமைத்துவ தொழிற்பாட் டிற்கேற்ப<br>• பாவனை மட்டத்திற்கேற்ப தகவல் முறைமை<br>• தந்திரோபாய மட்டம்<br>• முகாமைத்துவ மட்டம்<br>• அறிவு மட்டம்<br>• செயற்பாட்டு மட்டம் | • தகவல் முறைமையினை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் நியதிகளைச் சுட்டிக் காட்டு வார்.<br>• பாவனை மட்டத்திற்கேற்ப தகவல் முறைமை யினை வகைப்படுத்துவார்.<br>• பாவனை மட்டத்திற்கேற்ப தகவல் முறைமை யினை பரிசீலிக்கும் தனிநபர்களுக்கான உதார ணங்களை வழங்குவார். | 05 |
| | 17.4 பயன்பாட்டிற்கேற்ப தகவல் முறைமை யினை வகைப் படுத்துவார். | • பயன்பாட்டிற்கேற்ப தகவல் முறைமை<br>• கொடுக்கல் வாங்கல் உரு வாக்கல் முறைமை (TPS)<br>• அறிவுச்செயற்பாட்டு முறைமை (KWS)<br>• அலுவலக தன்னியக்க முறைமை (OAS)<br>• வணிக நுண்ணறிவு முறைமை (BTS)<br>• முகாமைத்துவ தகவல் முறைமை (MIS)<br>• தீர்மான உதவி முறைமை (DSS)<br>• நிறைவேற்று உதவி முறைமை (ESS) | • பயன்பாட்டிற்கேற்ப தகவல் முறைமையினை வகைப்படுத்துவார்.<br>• பயன்பாட்டிற்கேற்ப ஒவ்வொரு தகவல் முறைமை யினதும் பண்புகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• பயன்பாட்டிற்கேற்ப ஒவ்வொரு தகவல் முறைமை யிலும் நிறைவேற்றப்படுகின்ற கருமங்களைத் தெளிவுபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 17.5 முகாமைத்துவத் தொழிற்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமை யினை வகைப் படுத்துவார். | • தொழிற்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமை<br>• சந்தைப்படுத்தல் தகவல் முறைமை<br>• நிதி முகாமைத்துவத் தகவல் முறைமை<br>• செயற்பாட்டு தகவல் முறைமை<br>• மனித வள முகாமைத்துவ தகவல் முறைமை<br>• ஆய்வும் அபிவிருத்தியும் தகவல் முறைமை<br>• பல்வேறு தகவல் முறைமை களுக்கிடையிலான தொடர்பு | • முகாமைத்துவ தொழிற்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமையினை வகைப்படுத்துவார்.<br>• தொழிற்பாட்டின் அடிப்படையில் ஒவ்வொரு தகவல் முறைமைகளினதும் பண்புகளை வெளிப் படுத்துவார்.<br>• பல்வேறு தகவல் முறைமைகளுக்கிடையிலான தொடர்பினை தெளிவுபடுத்துவார். | 05 |
| | 17.6 தகவல் தொழில் நுட்பத்தைக் கேட் டறிந்து அதன் அனுகூலங்களை வெளிப்படுத்துவார். | • தகவல் தொழில்நுட்பம்<br>• விளக்கம்<br>• தகவல் தொழில்நுட்பத்துடன் இணைந்த ஏனைய தொழில் நுட்பங்கள்<br>• கணித்தல் முறையிலான தொழில் நுட்பம்<br>• தொடர்பாடல் தொழில்நுட்பம்<br>• தகவல் முகாமைத்துவ தொழில்நுட்பம்<br>• தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம்<br>• தகவல் தொழில்நுட்பத்தின் அனுகூலங்கள் | • தகவல் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்வார்.<br>• தகவல் தொழில் நுட்பத்துடன் இணைந்த வேறு தொழில் நுட்பங்களை விபரிப்பார்.<br>• தகவல் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவத் தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• தகவல் தொழில்நுட்பத்தின் அனுகூலங்களைப் பட்டியலபடுத்துவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 17.7 தகவல் தொடர்பாடலுக்காக இணைய வலையமைப்பினைப் பயன்படுத்துவார். | • இணைய வலையமைப்பின் பயன்பாடு<br>• இணைய வலையமைப்பினால் வழங்கப்படும் சேவைகள்<br>• உலகளாவிய வலையமைப்பு (www)<br>• இலத்திரனியல் தபால் (E-mail)<br>• கோப்பு மாற்று பெயர்ப் பத்திரம் (File Trans fer Protocol)<br>• உரையாடும் வசதி (Chat)<br>• செய்திக்குழு (News groups)<br>• தொலைக்கணினி (Tele Com puting)<br>• சமூக வலையமைப்பு<br>• முகநூல் (Face book)<br>• ட்விட்டர் (Twitter) | • இணைய வலையமைப்பினை அறிந்து கொள் வார்.<br>• இணைய வலையமைப்பினால் வழங்கப்படும் சேவைகளை விபரிப்பார்.<br>• அன்றாட தனிநபர் கருமங்களை இலகுபடுத்திக் கொள்வதற்கு இணைய வலையமைப்பின் உதவியினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறை யினைத் தெளிவுபடுத்துவார்.<br>• நிறுவனச் செயற்பாடுகளை இலகுபடுத்திக் கொள்வதற்கு இணைய வலையமைப்பு உதவு கின்ற முறையினைத் தெளிவுபடுத்துவார்.<br>• வணிக நிறுவனமொன்று சமூக வலையமைப் பினை துணையாகக் கொள்ளும் முறையினைச் சுட்டிக் காட்டுவார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| 18.0 வணிகங்களை ஆரம்பிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் வணிகத் திட்டத்தைத் தயாரிப்பார். | | | | 40 |
| | 18.1 வணிகத் திட்டமொன்றின் அடிப்படை அம்சங்களைக் கேட்டறிந்து வணிக எண்ணத்திற்குப் பொருத்தமான வணிகத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கான ஆயத்தத்தை வெளிப்படுத்துவார். | • வணிக எண்ணம் (கருத்து)<br>• வணிக எண்ணமொன்றினைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள்<br>• பேரினக் காரணிகள்<br>• சிற்றினக் காரணிகள்<br>• வணிகத் திட்டம்<br>• விளக்கம்<br>• முக்கியத்துவம்<br>• தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்<br>• வணிகத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பகுதிகள்<br>• முன்பக்கம்<br>• நிறைவேற்றுச் சுருக்கம்<br>• வணிக விபரம்<br>• சந்தைப்படுத்தல் திட்டம்<br>• செயற்பாட்டுத் திட்டம்<br>• மனித வளத் திட்டம்<br>• நிதித் திட்டம்<br>• இணைப்புக்கள் | • வணிக எண்ணத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• பொருத்தமான வணிக எண்ணமொன்றைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய பேரின, சிற்றின காரணிகளை விளக்குவார்.<br>• வணிக எண்ணங்களை பேரின, சிற்றின பகுப்பாய்விற்கு உட்படுத்தி, பொருத்தமான வணிக சந்தர்ப்பமொன்றைத் தெரிவு செய்வார்.<br>• வணிகத் திட்டத்தினை அறிந்து கொள்வார்.<br>• வணிகத் திட்டமொன்றின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துவார்.<br>• வணிகத் திட்டமொன்றைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களைச் சுட்டிக் காட்டுவார்.<br>• வணிகத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பகுதிகளைப் பட்டியற்படுத்துவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 18.2 வணிக எண்ணத்திற்குப் பொருத்தமான சந்தைப் படுத்தல் திட்டத்தைத் தயாரிப்பார். | • சந்தைப்படுத்தல் திட்டம்<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்<br>• தொழிலும் சந்தைப் பகுப்பாய்வும்<br>• உற்பத்தி (பொருட்கள் அல்லது சேவைகள்)<br>• இலக்குச் சந்தை<br>• போட்டியாளர்களின் பகுப்பாய்வு<br>• போட்டியாளர்களின் சந்தைப் படுத்தல் உபாய வழிமுறைகள்<br>• உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்<br>• உற்பத்திப் பொருள், சின்னம் என்பவை தொடர்பான உபாய வழிமுறைகள்<br>• விலை உபாய வழிமுறைகள்<br>• விநியோக உபாய வழிமுறைகள்<br>• மேம்படுத்தல் உபாய வழிமுறைகள்<br>• வருடாந்த விற்பனை எதிர்வு கூறல்<br>• சந்தைப்படுத்தல் செலவுகள் | • சந்தைப்படுத்தல் திட்டத்திற்கு விளக்கம் கூறுவார்.<br>• சந்தைப்படுத்தல் திட்டத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்களை விபரிப்பார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாகச் சந்தைப் படுத்தல் திட்டத்தைத் தயாரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 18.3 சந்தைப்படுத்தல் திட்டத்திற்கேற்ப செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பார். | • செயற்பாட்டுத் திட்டம்<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்<br>• உற்பத்தி இயலளவு<br>• நடைமுறையல்லாச் சொத்துக்களின் தேவை<br>• மூலப்பொருட்களின் தேவை<br>• ஊழியர் தேவை<br>• வருடாந்த உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்<br>• தொழிற்சாலை நில அமைவுத் திட்டம்<br>• கழிவுப் பொருட்களை அகற்றல்<br>• சமூக சூழல் தாக்கம்<br>• மொத்த உற்பத்திக்கிரயமும் அலகுக்கிரயமும்<br>• வணிகத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னரான செயற்பாட்டுக் கருமங்களும் அதற்கான செலவுகளும் | • செயற்பாட்டுத் திட்டத்தினை அறிந்து கொள்வார்.<br>• செயற்பாட்டுத் திட்டமொன்றின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• செயற்பாட்டுத் திட்டமொன்றில் உள்ளடக்க வேண்டிய விடயங்களை விபரிப்பார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாகச் செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 18.4 வணிகத்தின் மனித வளத் திட்டத்தைத் தயாரிப்பார். | • மனித வளத் திட்டம்<br>• விளக்கம்<br>• முக்கியத்துவம்<br>• உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்<br>• முயற்சியாளர்கள் / பங்காளர் தொடர்பான விபரங்கள்<br>• முகாமைத்துவத் திறன்கள்<br>• அமைப்புக் கட்டமைப்பின் அடிப்படைப் பதவிகளும் பொறுப்புக்களும்<br>• அமைப்பு வரைபடம்<br>• வருடாந்த செலவு | • மனித வளத் திட்டத்தை அறிந்து கொள்வார்.<br>• மனித வளத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• மனித வளத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை விபரிப்பார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாக மனித வளத் திட்டமொன்றைத் தயாரிப்பார். | 06 |
| | 18.5 வணிகத்தின் நிதித் திட்டத்தைத் தயாரிப்பார். | • நிதித்திட்டம்<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• உள்ளடக்க வேண்டிய விடயங்கள்<br>• செயற் திட்டக் கிரயம்<br>• மொத்த நிலையான கிரயம்<br>• மொத்த செயற்பாட்டுக்கு முன்னரான செலவுகள்<br>• மொத்த தொழிற்படு மூலதனம்<br>• மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்று<br>• விளக்குதல் | • நிதித் திட்டத்தினை அறிந்து கொள்வார்.<br>• நிதித் திட்டத்தினைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவார்.<br>• நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணங்களைப் பட்டியல்படுத்துவார்.<br>• நிதித்திட்டத்தில் ஒவ்வொரு கூறுகளையும் தெளிவுபடுத்துவார்.<br>• நிதித்திட்டத்தில் ஒவ்வொரு கூறுகளின் கீழும் காட்ட வேண்டிய விடயங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாக நிதித் திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய செயற்றிட்ட கிரயத்தை மதிப்பிடுவார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்றைத் தயாரிப்பார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • உள்ளடக்க வேண்டிய விடயங்கள்<br>• விற்பனை வருமானம்<br>• விற்பனைக்கிரயம்<br>• மொத்த இலாபம்<br>• செயற்பாட்டு இலாபம்<br>• வரிக்குப் பின்னரான இலாபம்<br>• மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று<br>• விளக்குதல்<br>• உள்ளடக்க வேண்டிய விடயங்கள்<br>• மொத்தக் காசு உட்பாய்ச்சல்<br>• மொத்தக் காசு வெளிப் பாய்ச்சல்<br>• மதிப்பிடப்பட்ட நிதிநிலைமைக் கூற்று<br>• விளக்குதல்<br>• உள்ளடக்க வேண்டிய விடயங்கள்<br>• நடைமுறை அல்லாத சொத்துக்கள்<br>• நடைமுறைச் சொத்துக்கள்<br>• நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்<br>• நடைமுறைப் பொறுப்புக்கள்<br>• மொத்த உரிமை<br>• கடனை மீளச் செலுத்தும் அட்டவணை | • வழங்கப்பட்ட தகவல்களினூடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற நிதிநிலைமைக் கூற்றினைத் தயாரிப்பார்.<br>• வழங்கப்பட்ட தகவல்களினூடாக நிதித்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற மதிப்பிடப்பட்ட கடனை மீளச் செலுத்தும் அட்டவணையைத் தயாரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 18.6 வணிகத் திட்டத்திற்கேற்ப வணிக எண்ணத்தின் பொருத்தப்பாட்டினை மதிப்பார். | • நிதி அறிக்கை, நிதியல்லாத அறிக்கைகளின் பகுப்பாய்வு<br>• நிதியல்லாத அளவீட்டுக் கருவிகள்<br>• மூலப்பொருள் காணப்படுகின்றதா?<br>• நடைமுறைப்படுத்த முடியுமா?<br>• சமூகத்திற்கு வழங்கும் பங்களிப்பு<br>• சூழல் நேசிப்புத் தன்மை கொண்டது<br>• தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த முடியுமா?<br>• நிதி அளவீட்டுக் கருவிகள்<br>• சமப்பாட்டுப் புள்ளிப் பகுப்பாய்வு | • நிதி அறிக்கைப் பகுப்பாய்வினை அறிந்து கொள்வார்.<br>• நிதி அறிக்கைப் பகுப்பாய்வின்போது பயன்படுத்தப்படுகின்ற நிதியல்லாத அளவீட்டுக் கருவிகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• நிதி அறிக்கைப் பகுப்பாய்வில் பயன்படுத்தப்படுகின்ற நிதி அளவீட்டுக் கருவிகளைப் பட்டியல்படுத்துவார்.<br>• நிதி, நிதியல்லாத அளவீட்டுக் கருவிகளினூடாக வணிகம் தொடர்பிலான தீர்மானங்களுக்கு வருவார். | 05 |
| | 18.7 நிறைவேற்றுச் சுருக்கத்தைத் தயாரிப்பார். | • நிறைவேற்றுச் சுருக்கம்<br>• விளக்குதல்<br>• முக்கியத்துவம்<br>• உள்ளடக்க வேண்டிய விடயங்கள்<br>• வணிகரின் பெயரும், முகவரியும்<br>• வணிகத்தின் வரலாறு<br>• வணிகத்தின் நோக்கம் | • நிறைவேற்றுச் சுருக்கம் என்பதை அறிந்து கொள்வார்.<br>• நிறைவேற்றுச் சுருக்கத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுவார்.<br>• நிறைவேற்றுச் சுருக்கத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்களை விபரிப்பார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | • உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அல்லது சேவைகள்<br>• போட்டியிட வேண்டிய சந்தை<br>• வணிகம் வெற்றியடைவதற்கும், போட்டித்தன்மையின் அனுகூலங்கள் கிடைக்கப் பெறுவதற்குமான காரணங்கள்<br>• பிரதான முகாமைத்துவக் குழு<br>• மொத்த முதலீடு<br>•வணிகர் ஈடுபடுத்திய அளவு<br>•உத்தேச கடன் அளவு | | 300 |

## 7.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

வணிகக் கல்விப் பாடத்திட்டம் 18 தேர்ச்சிகளையும், 117 தேர்ச்சி மட்டங்களையும் உள்ளடக்கியதாகும். இச் சகல தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை, மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளின் மூலம் மாணவர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இச் சகல தேர்ச்சி மட்டங்களின் அடிப்படையில், அத்தேர்ச்சி மட்டங்களின் இறுதியில் மாணவர்கள் அடைந்து கொள்ள வேண்டிய கற்றல் பேறுகள் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளது.

பொதுவாக பாடசாலை நேர அட்டவணைகளில் வருடத்திற்கு இப்பாடத்திற்காக 420 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இப்பாட உள்ளடக்கத்தில் வருடத்திற்கு 300 பாடவேளைகளுக்கு மாத்திரமே திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைய தரம் 12, 13க்காக 600 பாடவேளைகளை பூரணமாக்கக்கூடியவாறு பாட உள்ளடக்கமானது தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப இப்பாடத் திட்டமானது வருடத்திற்கு குறிப்பிட்ட பாடவேளைகளின் எண்ணிக்கையை விடக் குறைவான பாடவேளைகளை உள்ளடக்கியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இம் மேலதிகப் பாட வேளைகள், பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியும். இதன் மூலம் மாணவர் களுக்குத் தமது கற்றல் அனுபவங்களை மேலும் வளப்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்தின் கீழும் காட்டப்பட்டுள்ள கற்றல் விளைவுகளை அடைந்து கொள்ளும்போது செயற்பாட்டு ரீதியான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களினுள் எண்ணக்கரு ரீதியான அடைவினை அடைந்து கொள்ளும் முறைக்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயன்முறையானது திட்டமிடப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வணிகக் கல்விப் பாடத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு முறைகளில் கவனம் செலுத்தும்போது செயற்பாட்டு ரீதியில் கூடுதல் சார்பினைக் கொண்டதான பாட இணைச் செயற்பாடுகளையும் பாட ரீதியான பாடசாலைக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தல் மிக முக்கியமானதாகும். இதன் மூலம் மாணவர்களிடம் இயல்பாகக் காணப்படுகின்ற திறமைகளை வெளிக்கொணர்வதற்கும், ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கும் சந்தர்ப்பமளித்தல் வேண்டும். இதற்காகப் பாடசாலையில் இலகுவாக பயன்படுத்தக்கூடிய பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- சந்தைக் கணிப்பீடும், ஆய்வுகளை ஒழுங்கமைத்தலும்
- வணிக சந்தர்ப்பங்களை இனம் காண்பதில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- உண்மையான வணிக வாய்ப்புக்களுக்காக வணிகத் திட்டங்களை உருவாக்குதல்.
- பொருத்தமானதும், எளிமையானதுமான செயற்பாடொன்றை நடைமுறைப்படுத்தி அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

- வணிகச் சங்கமொன்றை அல்லது கழகமொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்லல்.
- வணிகவியல் தினமொன்றை நடாத்துதல்.
- பிரதேச வணிகச் சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை ஒழுங்குபடுத்துதல்.
- வணிகத்துறையின் உண்மை அனுபவங்களை வகுப்பறைக்குக் கொண்டு செல்வதற்காகக் கலந்துரையாடல் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.
- உண்மையான வணிக உலகத்தில் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான களச் சுற்றுலாக்களை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்தல்.
- பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை, பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம், பாடசாலை வங்கி போன்றவற்றை நடாத்திச் செல்வதற்கு வணிகக் கல்விப் பாடத்தைக் கற்கும் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- வணிகத் துறையுடன் தொடர்புடைய முக்கியமான இடங்களைத் தரிசிப்பதற்காகச் களச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தி அதன் துணையுடன் அறிக்கையொன்றைத் தயாரித்தல்.
- வணிகத் துறையின் போக்குகளைச் சுவர்ப் பத்திரிகையொன்றில் காட்சிப்படுத்தி அல்லது சஞ்சிகையொன்றை நடாத்திச் செல்வதில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- சந்தையொன்றை ஒழுங்குபடுத்தி நடாத்துவதன் மூலம் விலையிடல், விற்பனை, கணக்கு வைத்தல் போன்ற நடவடிக்கைகளை ஒன்றுடன் ஒன்று இணைந்த வகையில் ஏற்பாடு செய்தல்.
- வணிக சமூக பொறுப்புக்கள், விழுமியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நாடகமொன்றை உருவாக்கி அதை நடித்துக் காட்டல்.
- இளம் முயற்சியாண்மை அமைப்புக்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி, போட்டிகள், உரையாடல்கள், விவாதங்கள் என்பவற்றை நடாத்துதல்.
- வலையமைப்பைப் பயன்படுத்துவதன் மூலம் வணிக உலகத்தின் நவீன போக்குகளை இனங்காணச் செய்தல்.

மேற்காட்டியவாறு வணிகக் கல்விப் பாடத்திற்கு விசேட செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள் என்பனவற்றைப் பாடசாலையில் ஏற்பாடு செய்வதன் மூலம் இப்பாடத்தைக் கூடிய செயற்பாடு கொண்ட பாடமொன்றாக மாணவர்களுக்கும், சமூகத்திற்கும் கையளிப்பது மிகவும் முக்கியமானதாகும். இதற்காகப் பாடசாலைக்கு விசேடமான கொள்கையொன்றைக் கட்டியெழுப்பி நடைமுறைப்படுத்துவதற்கு க.பொ.த. (உயர்தரம்) வணிகக் கல்விப் பாடத்தைக் கற்கும் மாணவர்களையும், அப்பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றை உருவாக்குவது மிகப் பொருத்தமானது என முன்மொழிகின்றோம்.

## 8.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு வேலைத்திட்டத்தினடிப்படையில் ஒவ்வொரு தவணைக்குமுரிய குறித்த தேர்ச்சியையும், தேர்ச்சி மட்டத்தையும் உள்ளடக்கக்கூடியவாறு கற்றல் - கற்பித்தல் மதிப்பீட்டுக் கருவிகளை ஆக்கபூர்வமானதாகச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தரம் 13 இன் இறுதியில் தேசிய மட்டத்தில் மதிப்பீடு செய்யப்படும் க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு இப்பாடவிதானம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பாடவிதானத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படும் தேசிய மட்டத்திலான பரீட்சை முதலாவதாக 2019 ஆம் ஆண்டில் நடைபெறும். இப்பரீட்சையின் வினாப்பத்திரங்களின் மாதிரி, அதன் தன்மை என்பன தொடர்பாகத் தேவையான விபரங்கள் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.